# மன்னா

"இதோ நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்"
(திருவெளிப்பாடு 21:5)

விலை ரூபா 10.00

மன்னார் மறைமாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

மொழிவு 14 | ஐப்பசி, 2001 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 76

மன்னார் மறைமாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR

காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு

# மன்னார் மறைமாவட்டத்தில் மனித உரிமைகள் கருத்தமர்வு

கடந்த செப்ரெம்பர் 24ந் திகதி தொடக்கம் 27ம் திகதி வரை மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு ஒன்று மன்னார் ஆயர் இல்லத்தில் இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் பெரும்பாலான குருக்கள் இதில் பங்கேற்றனர். மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான மனித முன்னேற்ற அமைப்பாகிய வாழ்வுதயம் இதற்கான அனுசரணையை வழங்கியது. இயேசுசபை அகதிப்பணியின் மன்னார் மறைமாவட்ட பிரதிநிதி ஜேபாலன் குருஸ் அடிகளார் மற்றும் மன்னார் மறைமாவட்ட நீதி, சமாதான, மனித முன்னேற்ற ஆணைக்குழுவின் மனித உரிமைகள் அலுவலர் திரு. சந்தியாப்பிள்ளை ஆகியோர் இக்கருத்தமர்வின் முக்கிய ஏற்பாட்டாளர்களாக கலந்து கொண்டனர். இதைவிட சட்டத்தரணிகள், வைத்திய அதிகாரிகள், பத்திரிகையாளர் என பலருயை சிறப்புரைகள் இடம் பெற்றன. மனித உரிமைகள் தொடர்பாக பாதிப்புக்குள்ளான பலரின் நேரடி அனுபவப் பகிர்வுகளும் இடம் பெற்றன. காலத்தின் தேவையைக் கருத்தில்கொண்டு ஒழுங்கு செய்யப்பட்ட பயனுள்ள கருத்தமர்வாக இது அமைந்தது என இதில் பங்கேற்ற குருக்கள் கருத்துத் தெரிவித்தனர்.



## இரத்தினபுரி ஆயர் மல்கம் ஆண்டகை பேராயர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்



இரத்தினபுரி ஆயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை அவர்கள் நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தின் பொதுச் செயலாளர்களில் ஒருவராகவும் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் தலைவராகவும் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பரினால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் புதிய நியமனங்களின் பொருட்டு இவர் பேராயர் நிலைக்கும் உயர்த்தப்பட்டுள்ளார்.

ஆயர் மல்கம் றஞ்சித் அவர்கள் திருச்சபையின் மிக உயர்ந்த பணிப்பொறுப்பில் அமர்த்தப்பட்டது இலங்கைக்கு கிடைத்த தனித்துவமான ஒரு பெருமையாகும். இலங்கையர் ஒருவருக்கு இந்த உயர்ந்த பணிப்பொறுப்பு வழங்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இவரே இலங்கை ஆயர்களில் வயதில் இளையவராவார். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## யாழ் மறைமாவட்டத்தில் புதுப்பித்தல் தியானங்கள்



இந்தியாவின் கேரளா மாநிலத்தில் உள்ள முரிங்கூர் என்னுமிடத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களை இறை அனுபவத்திற்கும் புதுவாழ்வுக்கும் இட்டுச் செல்லும் இறைத் தியான இல்லத்தில் இருந்து (Divine Retreat centre) அருட்தந்தை அகஸ்ரின் மொண்டேகாட் அடிகளாரும் சகோதரர் யோச் தரகன் அவர்களும் யாழ் மறைமாவட்டத்திற்கு வந்து புதுப்பித்தல் தியானங்களை வழங்கியுள்ளனர். குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் பல்வேறு இடங்களில் இவர்கள் இத்தியானங்களை வழங்கினர். தியானங்களின் இறுதியில் மாபெரும் குணமாக்கல் வழிபாடு யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஒக்ரோபர் 8ந் திகதி இரவு இடம்பெற்றது. இந்நிகழ்வில் 40 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து கலந்து கொண்டனர். இதில் 7000க்கும் மேற்பட்டோர் பல்வேறு உடல் உள நோய்களில் இருந்து குணமடைந்தனர். யாழ் இறைமக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இத்தியானங்கள் இறைவனின் திருவருளால் கைகூடியதையிட்டு யாழ் இறைமக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர். இரண்டு ஆண்டுகளுக்கு மன்னார் மறைமாவட்டத்திலும் இதே குழுவினர் வந்து இத்தியானங்களை நடத்தி ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திச் சென்றது குறிப்பிடத்தக்கது.

## திருமலை இளம் குரு டொணேசன் வாகன விபத்தில் பலி திருமலையில் சோகம்

திருகோணமலை புனித மரியாள் பேராலய உதவிப் பங்குத் தந்தையான அருள்பணி. கிறகோரி டொணேசன் அகால மரணமானார். மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருக்கையில் 30. 08. 2001 அன்று வாகன விபத்தில் சிக்கி சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் 04.09.2001 இல் காலமானார். அருள் தந்தையின் மறைவினால் திருகோணமலை மறைமாவட்டம் சோகத்தில் மூழ்கியது. பேராலயத்தைச் சூழவுள்ள பகுதியெங்கும் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அருள் தந்தையின் இறுதி இரங்கல் நிகழ்வு 06.09.2001 இல் திருமலை புனித மரியாள் பேராலயத்தில் இடம் பெற்றது.

## கண்ணீர் அஞ்சலி

பேசாலைப் பங்குத் தந்தை அருட்பணியாளர் வின்சன் பற்றிக் (அமதி) அடிகளாரின் அருமைச் சகோதரர் திரு. டேவிட் பெர்னாண்டோ அவர்கள் 29. 08. 2001 அன்று ஜேர்மனியில் காலமானார். அடிகளாரின் அன்புத் தாயார் திருமதி டேவிட் ஆனாசி அவர்கள் 16. 10. 2001 அன்று கொழும்பில் காலமானார். இவர்களுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம். இவர்களின் மறைவால் துயருறும் வின்சன் பற்றிக் அடிகளாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை மன்னார்த் திருச்சபை சார்பாக தெரிவித்து நிற்கின்றோம் (பதிப்பாசிரியர்).

## மட்டுநகர் திருச்சபை மன்னார் ஆயரைப் பாராட்டுகிறது

மனித உரிமைகளுக்காக துணிவோடு குரல்கொடுக்கும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகையை மட்டக்களப்பு மறைக் கோட்ட மேய்ப்புப் பணிப் பேரவையினர் பாராட்டியுள்ளனர். இது தொடர்பாக அவர்கள் மன்னார் ஆயருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். (தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம்
### தியான உரைஞராக கோட்டாறு குருமுதல்வர் ஜோண் குழந்தை அடிகளார்

மன்னார் மறைமாவட்டக் குருக்களுக்கான வருடாந்த தியானத்தை வழ்ங்குவதற்காக திருச்சி தூய பவுல் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும் கோட்டாறு மறைமாவட்ட குருமுதல்வருமான அருட்தந்தை ஜோண் குழந்தை அவர்கள் மன்னாருக்கு வருகை தந்திருந்தார். மன்னார் மக்களின் விருந்தோம்பல் பண்பைப் பெரிதும் மெச்சிய அவர் தன்னுடன் குருத்துவக் கல்லூரியில் சமகாலத்தவர்களாக படித்த குரு நண்பர்களைச் சந்திப்பதில் தான் பெரிதும் மகிழ்வதாக குறிப்பிட்டார். 247 குருக்களைக் கொண்ட கோட்டாறு மறைமாவட்டம் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய மறைமாவட்டமாகும். இம்மறைமாவட்டத்தில் அன்பியங்கள் பெரு வளர்ச்சி கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வாழும் உரிமை மறுக்கப்பட்டோரை நினைவு கூருவோம்

[illegible]

## மன்னார் குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் ஐரோப்பா பயணம்



மன்னார் குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளார் உரோமை மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார். இவரது குருத்துவ திருநிலைப்படுத்தலின் 40வது ஆண்டு நிறைவை முன்னிட்டு உரோமையில் இடம்பெற்ற ஒன்று கூடலில் பங்கேற்பதற்காக இவர் அழைக்கப்பட்டிருந்தார். இவ்வொன்றுகூடலில் இவருடன் திருநிலைப்படுத்தப்பட்ட 60 அருட் பணியாளர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் பல நாடுகளில்லும் இருந்து வருகை தந்திருந்தனர். (தொடடர்ச்சி 8ம் பக்கம்)

"எல்லா முகங்களிலும் இருந்து கண்ணீரைத் துடைத்து விடுவார்" எசாயா 25 : 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனப் பொழிவு

### பதிப்பாசிரியர் பகர்வது

வணக்கம்

# முதுமையை முறுவலிக்கச் செய்வோமா?

முதுமை.......வயதின் அறுவடை. அனுபவத்தின் வெளிப்பாடு. தேடலின் திசை மாற்றம். வளர்ச்சியின் - முதிர்ச்சி நிலை. வாழ்வுப் புத்தகத்தின் பின் அத்தியாயம். உடல் வளர்ச்சியின் ஒரு தேய்பிறை. உழைப்புக்குக் கிடைத்த தவிர்க்க முடியாச் சன்மானம். கொள்கைகளை மதிப்பீடு செய்யும் அந்திமக் காலம். நடந்து வந்த பாதைக்கு நன்றி சொல்லும் நல்ல நேரம். எடுத்த முயற்சிகளின் இனிய பலன்களை இதயத்தில் அசைபோடும் இன்னோர் ஆரம்பம். உடலின் உறுப்புகள் ஓய்வுக்காக ஓலமிடும் கடைசிக் காலம். கடந்து வந்த பாதையைக் கணக்குப் பார்த்து கண்ணியத்தோடு வரவு செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயக் காலம். ஆம். முதுமை அது வாழ்வின் முழுமை.

## வயோதிபத்திற்கு வணக்கம் செலுத்துவவோம்

இத்தகைய வயோதிபக் காலத்துக்கு எல்லோருமே வந்துவிட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். வயோதிபம் - உலகத்திலே எவராலுமே மறுக்க முடியாத ஒரு யதார்த்தம். வயோதிபத்தில் இருந்து யாருமே தப்பித்துக் கொள்ள முடியாது. அது வாழ்க்கையின் விதி முறை. இயற்கையின் நியதி. நம் மத்தியில் வாழுகின்ற வயோதிபர் வியர்வையால், இரத்தத்தால், கண்ணீரால், தியாகத்தால், பாசத்தால், சவால்களால், கடின உழைப்பால் தாங்கள் சார்ந்திருக்கும் குடும்பங்களுக்கு, குழுக்களுக்கு, சமூகங்களுக்கு, நிறுவனங்களுக்கு, வேருக்கு நீராய், உரமாய் பணியாற்றி இருக்கின்றார்கள். இந்த வயோதிபர்களின் தியாகத்தால்தான் இன்றைய வாலிபர்களும் மற்றவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

வயோதிபர்கள் வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். பல ஆண்டு அனுபவங்களை கடந்து நடந்து வந்தவர்கள். நாம் 60 வருடங்கள் அனுபவத்தில் படிக்க வேண்டிய பாடங்களை அவர்களின் 60 வருட அனுபவத்திலிருந்து 60 நிமிடங்களில் நாம் படித்துக் கொள்ள முடியும். அவர்களின் அனுபவ அறிவுக்கு நாம் தலைவணங்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால் நம்முடைய ஏனோதானப் போக்கால், மரியாதையற்ற தனத்தால், அன்பின் மறுப்பால், தேவைகளைப் பூர்த்தி செய்யாததால் எத்தனை முதிய பெற்றோர் வேதனையில் வெம்பி, வெம்பி தங்கள் வாழ்வையே சகித்துக் கொண்டிருக்கிறார்கள். சிந்தித்துப் பார்ப்போம்.

## திட்டி தீர்க்காமல் ஒட்டி உறவாடுவோம்

பல காலம் உழைத்து ஓய்ந்தவர்களாக பல முதியவர்கள் உடல் தளர்ந்து வலுவிழந்து வாழ்கின்றனர். இவர்கள் தம் இறுதி நாளை எண்ணிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் வாழ இருக்கின்ற இந்தக் குறுகிய காலத்தில் இவர்களை மகிழ்ச்சியாக வாழவைப்பது நம் அனைவருடைய கடமை அல்லவா? அவர்களின் மனம் நோகாதவண்ணம் பார்த்துக்கொள்ளுவது நமது பொறுப்பு அல்லவா? முதியவர்கள் அன்புக்காக ஏங்கும் குழந்தைகள். அவர்கள் நமது அன்புக்காக ஏங்கி நிற்கும்போது நாம் அவர்களை அணுகிச் செல்லாது தூர விலகியோடுவது எந்த வகையில் நியாயமாகும்?

வயோதிபர்களில் பலர் தாமாகவே இயங்க முடியாதவர்கள். மற்றவர்களில் தங்கி வாழ்பவர்கள். அவர்கள் நமது உதவியை எதிர்பார்த்து அழைக்கும்போது நாம் ஓடி மறைந்து விடுவது எப்படி முறையாகும்? இவர்கள் நமக்கு சுமைகள் என்று கருதி இவர்களைத் திட்டி தீர்க்கின்றோம். சிலரை அடித்து உதைக்கிறோம். சிலரை வீட்டைவிட்டே விரட்டி விடுகின்றோம். இன்னும் சிலரை வயோதிப மடங்களுக்கு அனுப்பிவிட்டு நமது பொறுப்பில் இருந்து நழுவி - கைகழுவி விடுகின்றோம்.

## ஏட்டில் அல்ல வீட்டில் மாற்றம் வேண்டும்

ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தின் கவனத்தை முதியோர்மீது திருப்புவதற்காக ஐ.நா. சபை ஒக்ரோபர் முதலாம் திகதியை முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. முதியோரின் நலன்களைக் கவனிப்பதற்காக பல நாடுகள் பல சட்டங்களை ஏற்படுத்தியுள்ளன. வீட்டில் மாற்றம் இல்லையேல் ஏட்டில் எழுதப்பட்ட சட்டங்களால் எந்தப் பயனும் இல்லை. நம் மத்தியில் வாழும் முதியோரின் மட்டில் நாம் அக்கறையெடுப்போம். முதியோரைப் பேணுவது நமது கடமை. அவர்களைப் பாதுகாப்பது பராமரிப்பது நமது பொறுப்பு.

முதியவரின் தேவையை - முக்கியத்துவத்தை உணர்வோம். அவர்களுக்கு கை கொடுப்போம் - அவர்கள் நிம்மதியோடு அமைதியோடு வாழ வழி சமைப்போம்.

மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை

இறையாசீர்

அன்புடன்

அருட்பணியாளர் நேசன்

# அகில உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு தினம் 21.10. 2001

# திருத்தந்தையின் செய்தி

## கிறிஸ்துவில் புதிதாக ஆரம்பிக்க அழைப்பு

எனது அன்பான சகோதர சகோதரிகளே,



1. மீட்பின் யூபிலி விழாவை நாம் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடினோம். இது திருச்சபை முழுவதற்கும் அருளின் காலமாக அமைந்திருந்தது. இறைமக்கள் ஒவ்வொருவராலும் அனுபவ வாயிலாக இறை இரக்கம் உணரப்பட்டது. இந்த இறை இரக்கமானது கடந்த காலத்தை நன்றியுடன் நினைவுபடுத்தவும், நிகழ்காலத்தை அன்புடன் வாழச்செய்யவும், வருங்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கியிருக்கவும் எம்மைத் தூண்டியெழுப்புகிறது. இயேசுக் கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் (எபி13:8) என்பதை உறுதிப்படுத்துகின்றது.

### இயேசுவின் முகம்

2. உண்மையிலேயே இயேசுவின் திருமுகத்தில் எமது கண்களைப் பதித்து முன்னோக்கிப் பார்க்க வேண்டிய காலம் இது. இறைவன் எமக்காகச் செய்த அரும்பெரும் செயல்களுக்கு நன்றி கூறி, கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்து இறையரசைப் பறைசாற்ற பரிசுத்த ஆவி எம்மை அழைக்கிறார். இயேசுவின் ஆர்வம் நிறை தியானத்தினூடாக மறை போதக அர்ப்பணம் பிறப்பெடுதத்தது என்று நான் சென்ற வருட நற்செய்தியறிவிப்பு ஞாயிறு தினத்தன்று உங்களுக்கு நினைவூட்டினேன். இயேசுக் கிறிஸ்துவைத் தியானித்த கிறிஸ்தவர்கள் அவரது ஒளியினால் கவர்ந்திழுக்கப்பட்டு. மனுக்குலத்தின் ஒரே மீட்பரான கிறிஸ்துவில் கொண்ட விசுவாசத்திற்குச் சான்று பகர்வதற்குத் தம்மை அர்ப்பணிக்கத் தவறக்கூடாது.

ஆண்டவரின் முகத்தைத் தியானித்தலானது இன்றைய ஆண்களினதும் பெண்களினதும் முகத்தைத் தியானிக்க அவரது சீடரை இட்டுச் செல்கிறது. எனது சகோதரர்களில் மிகவும் கடைசியானவர்களில் இறைவன் தன்னை இனம் கண்டு கொள்கிறார் (மத் 25: 40-45). முதலானவரும் மாபெரும் நற்செய்தி அறிவிப்பாளருமான இயேசுவைத் தியானித்தலானது எம்மை நற்செய்தியறிவிப்பாளர்களாக உருமாற்றுகிறது. இது தந்தையினால் தம்மிடம் ஒப்படைக்கப் பட்டவர்களுக்கு நித்திய வாழ்வு அளித்தல் எனும் இயேசுவின் ஆவலுக்கு எம்மை விழிப்புள்ளவர்களாயிருக்கச் செய்கிறது.

அவரது சகோதரர்களில் கடைசியானவர்களைப் பற்றி தியானித்தலின் கனியானது, ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் எமக்கு மறைபொருளாயிருந்தாலும் தாங்கள் படைக்கப்பட்டு. அன்புசெய்யப்பட்ட இறைவனைக் காணும் தேடலில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதன் கண்டுபிடிப்பாகும். ஆம், இவ்வுலகில் அடியெடுத்து வைக்கும் ஒவ்வொருவரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி கிறிஸ்து. மனுக்குலம் அவரைத் தேடுகின்றது. ஆரம்பம் எது என்று தங்களுக்கே தெரியாத ஒரு உள்ளாந்தர கவர்ச்சியினால் கவர்ந்திழுக்கப்படுகிறார்கள். இது இறைவனின் இதயத்துள் மறைந்துள்ளது. அங்கு அவை உலகளாவிய மீட்புக்காகத் துடித்துக் கொண்டிருக்கின்றன. அதனால் இறைவன் எங்களைச் சாட்சிகளாகவும், முன்னறிவிப்பாளர்களாகவும் ஆக்குகின்றார். இக் காரணத்தினிமித்தம் ஒரு புதிய பெந்தக்கோஸ்து போன்று தனது ஆவியின் அக்கினியாலும் தனது அன்பினாலும் பிரசன்னத்தினாலும் எம்மை நிரப்புகிறார்.

### நம்பிக்கையின் நற்செய்தி அறிவிப்பு

3.மாபெரும் யூபிலியின் மற்றுமொரு கனி யாதெனில், விசுவாசத்துடனும் நம்பிக்கையுடனும் முன்னோக்கிப் பார்க்கும் மனநிலையாகும். இறைவன் எம்மீது நம்பிக்கை வைத்து. தம் இரக்கத்தைக் காண்பித்து தமது பணிக்கு எம்மை அழைப்பதன் மூலம் எம்மை மகிமைப்படுத்தியுள்ளார். இந்த அழைப்பு ஒரு சிலருக்கு மட்டுமே உரியதல்ல. மாறாக இது ஒவ்வொருவரதும் வாழ்க்கை நிலைகளுக்கேற்ப ஒவ்வொருவருக்கும் உரியது. மிலேனியம் ஆண்டிற்கான எனது அப்போஸ்தலிக்க மடலில் நான் எழுதியது: இந்த அளவிடற்கரிய அன்பு திருச்சபையின் பணியில் ஒரு புதிய உணர்வைத் தூண்டியெழுப்புவதிலிருந்து தவற மாட்டாது, இது ஒரு விசேட குழுவைச் சார்ந்தோருக்கு மட்டும் உரியதல்ல, இறைமக்கள் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களதும் பொறுப்பு வாய்ந்த ஈடுபாட்டை வேண்டி நிற்கின்றது. கிறிஸ்துவுடன் உண்மையான தொடர்பு கொள்பவர்கள் அவரைத் தமக்காக மட்டும் வைத்திருக்க முடியாது. அவர்கள் அவரை அறிவிக்க வேண்டும். கிறிஸ்தவ குழுமங்களிலும், குழுக்களிலும் வாழப்படும் நாளாந்த அர்ப்பணம் போன்ற ஒரு புதிய அப்போஸ்தலிக்க பரம்பல் அவசியம்.

இன்னும் கிறிஸ்துவை அறியாத - அவரை இனம் கண்டு கொள்ளாத மனுக்குலத்தின் ஒரு பகுதியை உற்று நோக்குவோமானால், நற்செய்தியறிவிப்புப் பணிக்கான அழைப்பு விசேட அவசரத்தன்மையைப் பெறுகிறது என்பதை நாம் கண்டு கொள்ளலாம். ஆம். அன்பான சகோதர சகோதரிகளே, நற்செய்தியறிவிப்புப் பணியானது எக்காலத்திலும் பார்க்க இக்காலத்தில் அதிகம் பலம் வாய்ந்ததாகவுள்ளது. மனித உடைபாடுகள், பற்றாக்குறை ஆகியவற்றிற்கு முகம் கொடுக்கும் அப்போஸ்தலருக்குக்கூட ஏற்படும் மானிட சோதனை, மக்களைத் தூரமாய் அனுப்பிவிடச் செய்கிறது. பதிலாக இந்த நேரமே உடனடியாக நாம் எமது சகோதரர்களின் முகத்தைத் தியானித்து நாம் ஒவ்வொருவரும் மீண்டும் இயேசுவின் வார்த்தைக்குச் செவிமடுக்க வேண்டும். "அவர்கள் போகவேண்டிய அவசியமில்லை, நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள்." (மத் 14: 16, மாற், 6: 37) அதே வேளை, இந்த வகையில் மானிட பலவீனத்தையும், இறைவனின் அருளையும் அனுபவ வாயிலாக அறிவோம். ஆழமாக எம்மை இனம் காட்டும் தடுக்க முடியாத உடைவுகளுக்கு விழிப்புடனிருந்து, இறைவன் எமக்குச் செய்தவற்றிற்கும் அவரது அருள்களுக்கும் அவர் இன்னும் செய்யப்போகின்றவற்றிற்கும் நன்றியுடையவர்களாயிருக்க வேண்டிய தேவையையும் உணர்கின்றோம்.

### பணிக்கான ஒரு வாழ்வு

4. நற்செய்தியறிவிப்புப் பணிக்காகத் தமது வாழ்வையே அர்ப்பணித்த மறைபரப்பாளர்கள் குருக்கள், துறவிகள், பொதுநிலையினரை நாம் நினைவுகூருவதிலிருந்து எவ்வாறு தவற முடியும்? அவர்களது வாழ்வு மூலமாக இறைவனின் அருள்கள் முடிவற்றவை (சங் 89) என்பதை அவர்கள் பறைசாற்றினார்கள். இந்த முடிவற்றவை என்பது இரத்தம் சிந்துதல்வரை சென்றது என்றால் அது. அரிதான செயற்பாடல்ல. கடந்த நூற்றாண்டில் விசுவாசத்திற்குச் சான்று பகர்ந்தவர்கள் எண்ணற்றவர்கள். அவர்கள் தம்மைத் தாரளமாகக் கையளித்தமையால் இறையரசு செழித்து வளர்ந்தது. எமது நன்றியுடன் கூடிய நினைவுகள் எமது செபத்துடன் இணைந்து அவர்களை நோக்கிச் செல்கின்றன. அளவிடற்கரிய சான்றுகளால் சூழப்பட்டுள்ள (எபி 12: 1) இவர்களது செயற்பாடுகளும், வார்த்தைகளும், உலகின் ஒவ்வொரு கண்டத்திலும் நற்செய்தி தொடர்ந்து எதிரொலிக்கச் செய்கின்றன. இதனைக் காணும் இறைமக்கள் அனைவரும் உறுதியும் உற்சாகமும் அடைகின்றனர். அவாகளது மாதிரி அனைவருக்கும் தூண்டுகோலாகவும், ஆதரவாகவுமிருக்கின்றது.

### அனைவருக்குமான பணி

5. நற்செய்தியறிவிப்புப் பணி என்பது அனைவருக்கும் அளிக்கப்பட்டுள்ள ஒரு கொடையை மகிழ்ச்சியுடன் பறைசாற்றுவதும் ஒவ்வொருவரினதும் சுயாதீனத்தின்படி மாபெரும் கண்ணியத்துடன் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டியதொன்றாகவுமிருக்கிறது. அதாவது உலகை அதிகம் அன்பு செய்தமையால் தனது மகனை உலகிற்கு அளித்த (அரு 3:16) அன்பாயிருக்கும் இறைவனை வெளிப்படுத்தும் கொடை. எனவே திருச்சபையானது உலக மாந்தரிடையே அளிக்க வேண்டிய தனது நற்செய்தியறிவிப்புச் செயற்பாட்டினைக் கைநெகிழ முடியாது. இது அனைவருக்குமான ஒரு அழைப்பு. இது உடனடியான, தாராளமான பதிலை வேண்டி நிற்கும் ஒரு அவசர அழைப்பு. நாம் கட்டாயமாகப் புறப்பட வேண்டும். இயேசுவின் அன்னையாகிய மரியாளைப் போன்று, வானதூதனின் முதல் அறிவிப்பினால் தூண்டப்பட்ட இடையரைப் போன்று, உயிர்த்த கிறிஸ்துவை முதன் முதலில் கண்டு கொண்ட மரிய மதலேனாளைப் போன்று நாம் தாமதமின்றிப் புறப்பட வேண்டும். இந்தப் புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தில் உலகின் பெருந்தெருக்களில் நாம் பயணம் செய்யும் வேளையில் எமது பாதச்சுவடுகளை மிக விரைவாக அடியெடுத்து வைக்க வேண்டும். வாரத்தின் முதல் நாள் (அரு 20: 19) மாலையில் மேல்மாடியில் கூடியிருந்த தமது சீடருக்குத் தோன்றி அவர்கள் மேல் தமது உயிரளிக்கும் ஆவியை ஊதி நற்செய்தியறிவிப்புப் பணிக்குத் துணிவுடன் புறப்படச் செய்தது போன்று நாமும் அவரைச் சந்திக்கவேண்டுமென்று உயிர்த்த கிறிஸ்து எம்மிடம் கேட்கின்றார்.

### ஆண்டு நிறைவு வருடம

6. அன்பான சகோதர சகோதரிகளே, நற்செய்தியறிவிப்புப் பணியானது செபத்தையும் வெளிப்படையான அர்ப்பணத்தையும் வேண்டி நிற்கிறது. நற்செய்தியை எங்கும் பரவச் செய்வதற்கு அதிகளவான தேவைகள் உள்ளன. பரிசுத்த தந்தை 11ம் பத்திநாதரால் ஏற்படுத்தப்பட்ட நற்செய்தியறிவிப்பு ஞாயிறு தினத்தின் 75வது ஆண்டு நிறைவு இவ்வருடமாகும். அக்காலம் தொட்டு நற்செய்தியறிவிப்பு ஒரு விசேட நிகழ்வு என்பதை இறைமக்களுக்கு நினைவுபடுத்தும் நிரந்தரமான நற்செய்தியறிவிப்பு ஆணையாக இது விளங்குகின்றது. ஏனென்றால் நற்செய்தியறிவிப்பு அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும், மறைமாவட்டங்கள், பங்குகள், திருச்சபைக்குள் உள்ள நிறுவனங்கள், சபைகள் அனைத்துக்கும் உரியதொன்றாகும். அதேவேளை நற்செய்தியறிவிப்பு எமது பங்களிப்பை மட்டும் வேண்டி நிற்கவில்லை. மாறாக மறைபோதகம், ஏழைகளுக்காக நாம் செய்யும் பிறர் அன்புச் செயல்கள், ஆகியவற்றையும் உறுதிப்படுத்தும் தகுந்த சந்தர்ப்பமாய் அமைகின்றது. இந்த நாள் திருச்சபையின் வாழ்வில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாள். எனவே இந்த ஆண்டு நிறைவு தினமானது நற்செய்தியறிவிப்பு மனநிலையை வளர்க்கும் பொதுவான முயற்சிக்கான மாபெரும் தேவையைச் சிந்திக்கும் ஒரு தருணமாகவும் நற்செய்தியறிவிப்பாளர்களுக்குத் தேவையான உலக பொருட்களைச் சேகரிக்கும் தினமாகவும் அமைவதாக.

### கிறிஸ்துவிலிருந்து புறப்படுவோம்

7. மாபெரும் யூபிலி ஆண்டின் நிறைவு நாளான 2001ம் ஆண்டு தைத்திங்கள் 6ம் நாள் எனது மறையுரையில் நான் கூறியது: பெந்தக்கோஸ்தின் ஆர்வத்துடனும் புதுப்பிக்கப்பட்ட ஊக்கத்துடனும் கிறிஸ்துவிலிருந்து புதிதாகப் புறப்படுங்கள். மன்னிப்பைக் கொடுத்து இரக்கத்தைக் கண்டடைந்த நீங்கள் கிறிஸ்துவிலிருந்து புறப்படுங்கள். துன்பத்தையும் வேதனையையும் அறிந்து கொண்ட நீங்கள் கிறிஸ்துவிலிருந்து புறப்படுங்கள். வெதுவெதுப்பான நிலையினால் சோதனைக்காளாக்கப்பட்ட நீங்கள் கிறிஸ்துவிலிருந்து புறப்படுங்கள். அருளின் ஆண்டு முடிவற்றது. புதிய மிலேனியத்தின் திருச்சபையாகக் கிறிஸ்துவிலிருந்து புறப்படுங்கள். அவ்வாறு நீங்கள் செல்லும்பொழுது பாடுங்கள்: திருச்சபையின் அன்னையாகிய மரியாள், நற்செய்தியறிவிப்பின் விண்மீன், பெந்தக்கோஸ்தே தினத்தன்று அப்போஸ்தலரோடு இருந்தது போன்று எமது பயணத்திலும், எம்முடன் உடன் வருவாளாக. அவளது வேண்டுதலின் மூலமாகத் திருச்சபைச் சமூகம் முழுவதினதும் செயற்பாடான நற்செய்தியறிவிப்புக் கடமையில் நாம் நிலைத்து நிற்கும் அருளை இறைவன் எமக்கு அருள்வாராக. இந்த மன உணர்வுடன் எனது ஆசீரை உங்களுக்கு அளிக்கிறேன்.

2ம் அருள் சின்னப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்விச் சிறப்பிதழ்

## மன்னார் மறைமாவட்டத்தில் மறைக்கல்வி வாரம்

## 8-14 ஐப்பசி- 2001


### யார் மறைவாழ்வுப் பணியாளர்?

- இறையனுபவம் உள்ளவர்.
- அதை பகிர்ந்து கொள்பவர்.
- சிறப்பாக அழைப்புப் பெற்றவர்.
- கிறிஸ்துவின் முப்பணிகளில் பங்கேற்பவர்.
- இறைவாக்கினர்.
- அநீதியை அழிப்பவர்.
- கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள பாலம் போன்றவர்.
- ஆவியின் மனிதர்.

கற்றுக்கொடுப்போர் கற்றுக் கொடுப்பதிலும்



ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும்



ஈடுபடுக (உரோமர் 12: 6- 8)

### மறைக்கல்வி பற்றி திருச்சபையின் போதனை

பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு உயிர் அளித்திருக்கிறார்கள் என்பதால் அவர்களே குழந்தைகளது விசுவாச வளர்ச்சிக்கும் பொறுப்பாய் இருக்கிறார்கள். திருமுழுக்கினால் அவர்கள் (பிள்ளைகள்) பெற்ற விசுவாசத்திற்கு தக்கபடி கடவுளைக் கண்டுணரவும், அவரை வழிபடவும், பிறருக்கு அன்புசெய்யவும் பிள்ளைகள் குழந்தைப் பருவத்தில் இருந்தே கற்பிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு
கிறிஸ்தவக் கல்வி. எண் 3

## மறைக்கல்விப் பணியில் மறையாசிரியர்கள்

மறைக்கல்வி மனித வாழ்வுடன் இரண்டறக் கலந்ததாக இருக்க வேண்டும் என்பது இன்றைய எதிர்பார்ப்பாக உள்ளது. மறைக்கல்விப் பணியானது உணவின்றித் தவிப்போர், சிறு வயதில் கடின உழைப்பில் ஈடுபடுவோர், வாழ்விழந்து தவிப்போர், வலுவிழந்தோர், சாதி வேற்றுமையால் ஒதுக்கப்பட்டோர், சிறையில் வாழுவோர் என சமூகத்தின் அடி வேர் வரை ஆழமாக ஊடுருவிச் செல்வதாக இருக்க வேண்டும். எனவே மறைக்கல்விப் பணி என்பது சமத்துவ வாழ்வை நோக்கி சமூகத்தை இயக்கிச் செல்கின்ற ஒன்று என்பதே இன்றைய பார்வையாகும். எனவே மறைக்கல்விப் பணிபுரியும் ஒவ்வொரு மறையாசிரியரும் முழுச் சமூக விடுதலை, அன்புறவு கொண்ட சமூக உருவாக்கம், நீதிக்காகவும் நேர்மைக்காகவும் குரல் கொடுத்தல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு பணியாற்றல் வேண்டும்.

பங்குத் தளங்களில் நடைபெறும் மறைக்கல்விப் பணி என்பது வெறும் கற்றல் - கற்பித்தல் எனும் அறிவூட்டல் வழியாகவோ அல்லது கரும்பலகைக்கும் வெண்கட்டிக்கும் கட்டுப்பட்ட வகுப்பறைக் கல்வியாகவோ அமைந்து விடுமானால் மேற்சொன்ன நோக்கங்களை அடைவதென்பது சாத்தியமற்றதாகிவிடும். எனவே மறைக்கல்வி ஏன்பது முறையாக திட்டமிடப்பட்ட பயிற்சியாக அமைய வேண்டும். அதாவது இறையாட்சியை இவ்வுலகில் படிப்படியாக உருவாக்க வழி அமைப்பதாக மறைக்கல்வி மாறவேண்டும்.

ஒவ்வொரு பங்கிலும் உள்ள மறையாசிரியர் மறைக்கல்வி வழங்க முற்படும்போது, முதலில் சமூக ரீதியானதொரு பகுப்பாய்வு அவர்களிடம் இருத்தல் அவசியம். சமூகத்தின் அமைப்பு, அதன் செயற்பாடு, சமூகத் தேடல்கள், தேவைகள் பிரச்சனைகள், சமூகப் பண்பாடு, அரசியல், பொருளியல், இயக்கப்பாடுகள் போன்றவற்றை ஆராய்ச்சிக் கண்கொண்டு நோக்க வேண்டும். அடுத்து இந்த சமூக நிலைப்பாட்டை இறைவார்த்தையின் ஒளியில் நோக்கி அவற்றை விமர்சன ரீதியாக மாணவருக்கு வழங்க வேண்டும். இவற்றின் வழியில் ஒரு சீரிய சமுதாயத்தினை உருவாக்குவதற்கான உந்து சக்தியாக மறைக்கல்விப்பணி அமைய வேண்டும்.

எனவே மறைக்கல்விப் பணி என்பது இலகுவான ஒன்றல்ல. மறைக்கல்வி பணி புரியும் மறையாசிரியர் ஒவ்வொருவரும் விவிலிய அறிவுடன் மட்டும் நின்று விடாமல் சமூகவியல், அரசியல், பொருளியல், உளவியல் மற்றும் மானுடவியல் என்ற அனைத்துத் துறைகளிலும் தமது அறிவை வளர்த்துக்கொண்டு தாம் பெற்ற ஒளியில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களை மற்றும் பெரியவர்களை வழி நடத்துபவர்களாக இருக்க வேண்டும்.

## மறைமாவட்ட மறைக்கலவி இயக்குனரின் சிறப்புச் செய்தி

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்று தமிழ் கூறும் நல்லுலகம் ஆசிரியப் பணி ஆற்றுவோரை இறைவனுக்குச் சமமாக மதிக்கிறது. எழுத்து அறிவுக் கண்களை மட்டும்தான் திறக்கும். ஆனால் விசுவாச அனுபவப் பகிர்வோ ஆன்மீகக் கண்களையும் திறக்கும் அற்புத சக்தி கொண்டது. ஆகையால்தான் மறைவாழ்வுக் கல்வி எப்போதும் மேன்மை மிக்கதாகக் கருதப்படுகின்றது.

நமது மன்னார் மறைமாவட்டத்தில் 570 மறைவாழ்வுப் பணியாளர்கள் தங்களை அர்ப்பணித்து சிறப்பான முறையில் பங்குகளில் மறைக்கல்விப் பணியை முன்னெடுத்துச் செல்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். குறிப்பாக இந்தப் பொது நிலையினர் ஆண்டில் எமது மறைவாழ்வுப்பணி நிலையம் பொதுநிலையினர் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. பொதுவாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பொதுநிலையினரின் அழைப்பு, ஆன்மீகம் மற்றும் பணிகள் பற்றிய சிந்தனைகளை பல சந்தர்ப்பங்களில் பகிர்ந்துகொள்ள முடிந்தது. நடைபெற்று முடிந்த விவிலிய போட்டிகளில் மாணவர்களை பெற்றோர்கள், மறைவாழ்வுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பான முறையில் ஊக்கப்படுத்தி உருவாக்கியதை காண முடிந்தது. பல பங்குகளிள் தோறும் அருட்சாதனப் பாசறைகள் சிறப்பாக நடைபெற்றன. அதிலும் சிறப்பாக ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உறுதிப்பூசுதல் பற்றிய உண்மைகளை பாசறைகள் வழியாக எடுத்துச் சொல்ல முடிந்தது. பங்குபற்றியோர் மிக ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

உறுதிப்பூசுதல் வழியாக ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் பணி வாழ்வு பற்றி எமது நிரந்தர மறைவாழ்வுப் பணியாளர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவத்தினூடாக பகிர்ந்து கொண்டார்கள்.

இன்னும் நமது மறைமாவட்டத்தில் நாம் முன்னெடுத்துச் செல்லும் அன்பிய திட்டங்கள் வழியாக பொதுநிலையினரின் ஆர்வமிக்க பணிவாழ்வு அதிகரித்துச் செல்வதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆகவே இப்படியான எமது விசுவாச பயணத்தில் நாம் ஒருவருக்கொருவர் கற்றுக் கொடுத்து ஊக்கப்படுத்தி உருவாக்க அழைக்கப்படுகின்றோம்.

இறைவன் கொடுக்கும் இந்த அழைப்பை பெற்றோர், ஆசிரியர், மறைவாழ்வுப் பணியாளராகிய நாங்கள் ஒரு போதும் தட்டிக்கழிக்க முடியாது. எனவே இந்த பொதுநிலையினர் ஆண்டிலே எம் மத்தியில் இன்னும் அதிகமான அர்ப்பணமிக்க பொதுநிலையினர் உருவாக வேண்டுமென ஆசிக்கின்றேன்.

அருட்பணியாளர் டெஸ்மன் குலாஸ

### விவிலியப் போட்டி அன்பளிப்பு அதிஸ்டசாலிகள்

விவிலியப் போட்டி அன்பளிப்பு நிதிக்கான அதிஸ்ட இலாபச் சீட்டிழுப்பில் பரிசுகளைப் பெறும் அதிஸ்டசாலிகள். 1ம் இடம் :- யேசுராஜன், 1ம் வட்டாரம், வங்காலை. 2ம் இடம் :- வி. மேரி எமில்டா, பண்டிவிரிச்சான். 3ம் இடம் :- சூ. நீற்றப்பர், 8ம் வலயம், மடு.

### மன்னார் மறைமாவட்டத்தில் மறையாசிரியர்கள்

மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 26 பங்குகளிலும் 570 மறையாசிரியர்கள் பணி ஆற்றுகிறார்கள். அதி கூடிய மறையாசியர்கள் பணியாற்றும் பங்கு மன்னார். இங்கே 50 மறையாசிரியர்கள் உள்ளனர்.

### மறையாசிரியர் டிப்ளோமா தேர்வு

மறையாசிரியர் டிப்ளோமா தேர்வு இவ்வருடம் 17ம் திகதி கார்த்திகை மாதம் மன்னார், முருங்கன், மடு மற்றும் வவுனியா ஆகிய நான்கு தேர்வு நிலையங்களில் நடைபெறும். 1ம் தேர்வுக்கு 60 பேரும், 2ம் தேர்வுக்கு 121 பேரும் 3ம் தேர்வுக்கு 41 பேருமாக மொத்தம் 222 பரீட்சார்த்திகள் இந்த தேர்வுக்குத் தோற்றவிருக்கின்றார்கள்.

### மறைக்கல்வித் தேர்வு

இவ்வருடம் பாடசாலை மட்டத்திலான மறைக்கல்வித் தேர்வுக்கு மறைமாவட்ட பாடசாலைகள் முழுவதிலுமிருந்து ஏறக்குறைய 13000 கத்தோலிக்க மாணவர்கள் தோற்றவுள்ளனர். தேர்வு 10ம் திகதி கார்த்திகை மாதம் நடைபெறும். கடந்த வருடம் 75 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கு 2500 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

### மறைக் கல்வியின் நோக்கம்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் "இக்காலத்தில் மறைக்கல்வி அளித்தல்" என்ற தமது சுற்றுமடலில், மறைக்கல்வியின் நோக்கத்தைப் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்.

மறைக்கல்வியின் தனிப்பட்ட நோக்கம் இன்னும் தொடக்க நிலையிலுள்ள விசுவாசத்தை இறைவனின் அருட்துணையால் வளர்ப்பதும், இளவயதினர் முதிர்வயதினரான விசுவாசிகளின் கிஸ்தவ வாழ்வுக்கு நாளுக்கு நாள் உணவூட்டி அதை நிறைவுக்குக் கொண்டு செல்வதுமாகும். தொடக்க அறிவிப்பில் பரிசுத்த ஆவி விதைத்ததும் ஞானஸ்நானத்தில் நிச்சயமாக அளிக்கப்பட்டதுமான விசுவாச விதைக்கு அறிவு மட்டத்திலும் வாழ்க்கை மட்டத்திலும் வளர்ச்சி கொடுப்பதால் இந்த நோக்கம் நிறைவுறும்.

திருத்தந்தை தெளிவாகக் குறிப்பிடும் நோக்கம்

1) விசுவாச வளர்ச்சி
2) கிறிஸ்தவ வாழ்வில் முதிர்ச்சி

விசுவாசம் என்றால் ஏதோ ஒரு சில மறை உண்மைகளை மனப்பாடம் செய்து மனதில் பதியவைத்தல் அல்ல. அல்லது, கண்ணால் காண இயலாத இறைவனை நம்புவது மட்டும் அல்ல. விசுவாசம் என்பது ஒரு வாழ்க்கை. அது ஓர் உறவின் வாழ்க்கை. இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே வளரும் உறவின் வாழ்க்கை. இறைவனைப் பற்றிய உண்மைகளை நம்புவது மட்டும் விசுவாசம் ஆகிவிடாது. கிறிஸ்து வழியாக இறைவன் விடுக்கும் அழைப்புக்கு, இறைவெளிப்பாட்டிற்கு மனிதன் அளிக்கும் பதிலே அது. இந்த விசுவாசம், நம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சமயங்களில், பல்வேறு கட்டங்களில் நம்மில் படிப்படியாக வளர்ந்துகொண்டே வருகின்றது.

### மறைக்கல்வியின் பயன்பாடு

1. மாணவனுக்கு தெய்வ சக்தி உண்டு என்று உணர உதவுகின்றது.
2. மாணவனுக்கு விவிலியப் பகுதிகளை தெளிவாக புரிந்து கொள்ள உதவுகின்றது.
3. மாணவனுக்கு இறை பக்தியுணர்வை ஊட்டுகிறது.
4. மாணவனை இறைவனின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கச் செய்கிறது.
5. மாணவனை இவ்வுலக வாழ்வில் மனத்தைரியத்துடன் செயல்பட வழி வகுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் பொழில்



## சிறுவர் சிறுகதை - விடா முயற்சியின் பயன்

வேலு என்னும் குடியானவருக்கு நிமல் மற்றும் விமல் என்னும் பெயரில் இரு புதல்வர்கள் இருந்தார்கள். இவரது பரம்பரைத் தொழில் விவசாயம். இவரது மனைவியாகிய கண்மணி இவருக்கு உதவியாக இருந்தார். புதல்வர்கள் இருவரும் சிறுவர்கள். ஆதலால் பாடசாலைக்குச் செல்வது அவர்கள் வழக்கமாக இருந்தது. மூத்தவனான நிமல் சோம்பேறியாகவும் படிப்பில் ஆர்வம் இல்லாதவனாகவும் இருந்தான். தனது சிறுவயதிலேயே பெற்றோருக்கு அமையாது ஊர் சுற்றினான். ஆனால் இளையவனான விமலோ எந்நேரமும் சுறுசுறுப்புடனும் இறைபக்தியுடனும் செயல்ப்பட்டான். படிப்பில் அக்கறை உள்ளவனாகவும் ஆசிரியர் அனைவரினதும் விருப்பத்துக்குரியவனாகவும் காணப்பட்டான்.

விமல் பாடசாலைவிட்டு வீடு வந்ததும் சொற்ப நேரமாவது தன் பெற்றோருக்குத் தோட்டத்தில் உதவி செய்வான். இதனால் அனைவரினதும் விருப்பத்துக்குரியவன் ஆனான். ஆனால் நிமலை எல்லோரும் வெறுத்து ஒதுக்கினர். இதனால் பொறாமை கொண்ட நிமல் விமலைப் பலவீனப்படுத்தும் நோக்கில் அவனை அழைத்து "நீ ஏன் இப்படியெல்லாம் ஓடித்திரிந்து பலவீனம் உடையவனாய் இருக்கிறாய். உடல் நலிவடைந்து விட்டது. என்னைப்போல் சும்மா இருக்காலாம்தானே? சாப்பிட உணவில்லையா? பெற்றோர் எமக்காக இருக்கும்போது நாம் ஏன் கஸ்ரப்பட வேண்டும்?" என்று தம்பியாகிய விமலிடம் சொல்லி அவனை திசைதிருப்ப முயன்றான். ஆனால் விமல் இறைபற்றுள்ளவனாகவும் தன் காரியங்களில் உறுதியாகவும் இருந்ததனால் இறைவனும் அவனுடன் இருந்து அவனை வழிநடத்தினார். அதனால் விமல் தன் அண்ணனுடைய வஞ்சக வார்த்தைக்குச் செவிகொடாது தன் பெற்றோருக்கு அமைச்சல் உள்ளவனாக வாழ்ந்தான்.

இருவரும் வளர்ந்து வாலிப வயதை அடைந்தனர். பெற்றோரை இழந்தனர். விமல் படிப்பின் மூலம் பயன் பெற்று வெளியூர் சென்று உழைத்தான். ஆனால் நிமல் படிப்பை இழந்ததனால் பதவியை இழந்தான். கஸ்ரம் என்னும் துன்பத்திலே சிக்கித் தவித்தான். தனது அண்ணன்படும் துன்பத்தை அறிந்த விமல் அவனுக்கு உதவி செய்தான். தனது தம்பியின் ஊக்கத்தையும், வஞ்சகனாகிய தனக்குச் செய்யும் இரக்கம் நிறைந்த உதவிகளையும் எண்ணியவனாய் தனது அறியாமைகளை நினைத்து வெட்கப்பட்டு மனம் வருந்துகிறான்.

எனவே நாம் ஒவ்வொருவரும் சிறுபராயம் தொட்டே உறுதி, உற்சாகம் மற்றும் மனத்துணிவு கொண்டு செயல்படுவோமேயானால் வாழ்வு நிச்சயமாகவே கரும்பைப்போல் இனிமையாக இருக்கும்.

ச. மெறின் டயானா, ஒன்றிய இல்லம்,
கள்ளியடி.

# சிறுவர் தொடர் கதை



## புனித லொயோலோ இஞ்ஞாசியார்

அங்கம் 5


17, நெடிது துாரம் பயணம் சென்றபின் மென்சேராத் மலையின் அடிவாரத்தை வந்து அடைந்தார். அதிகக் களைப்பாக இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது உடனே மலைமீது ஏறினார். மலை 1200 மீட்டர் உயரம் உள்ளது. மலையின் உச்சியை அடைந்ததும் கோவிலுக்குள் சென்றார். அங்கு அவர் முழு இரவையும் மரியாளின் சுருபத்திற்கு முன்னால் கண் விழித்து செபிப்பதில் கழித்தார்.

18, மரியாளைத் தன் அரசியாக ஆக்கி அவளுக்குத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்தார். இந்த அர்ப்பணிப்பின் வெளி அடையாளமாகத் தான் வைத்திருந்த வாளை ஒப்புக்கொடுத்தபின் அந்த பீடத்தின் அருகிலேயே அதைத் தொங்க விட்டார்.

19, அந்த இரவில் அவர் தன்னிடத்தில் ஒரு பெரும் மாறுதலைக் கண்டார். மரியாள் அவருக்கு துாய்மை என்ற பரிசை அளித்தார். எனவே அன்றிலிருந்து துாய்மைக்கு எதிராக அவருக்கு சோதனை எழுந்ததேயில்லை. கோவிலை விட்டு வெளியே வரும்பொழுது ஒரு பிச்சைக்காரனைச் சந்தித்தார். அவனுக்குத் தன் விலையுயர்ந்த ஆடைகளைக் கொடுத்துவிட்டார்.

20, பின் தான் உலகத்தையும் உலக இன்பங்களையும் துறந்து விட்டதின் அடையாளமாக ஒரு அங்கியை மட்டும் அணிந்து கொண்டார். அது முதல் அவர் ஒரு எளிமைப் பிரியனாகவே வாழ்ந்தார். மேலும் இறைவனுக்கு மட்டுமே பணிபுரியவும் அவருக்காக எந்தவிதத் துன்பத்தையும் மேற்கொள்ளவும் தயங்கவில்லை. (தொடரும்..................)

# வாங்க சிரிக்கலாம்



ஆசிரியர்: "டேய் அருண், ஏன் வீட்டுப்பாடம் செய்யல்ல"
மாணவன்: "சேர், நான் வீட்டில தங்கிறதில்ல. கொஸ்டல்ல தான் தங்கிறது, அதனாலதான் நான் வீட்டுப்பாடம் செய்யல"
(அனுப்பியவர் - சி.எஸ்.எஸ்.குருஸ் சிறிமதி இல.97 பெரிய பண்டிவிரிச்சான், மடுக்கோயில்)

*****

பால்காறன்:- பால் பால்...... அக்கா பால் வேணுமா?
வீட்டுக்காற பெண:- ஓம் அண்ண 1லீற்றர் பால் தாங்க
பால்காறன்:- இந்தாங்கக்கா பால்
வீட்டுக்காற பெண்:- என்ன அண்ண அரை லீற்றர் பால் தாறிங்க
பால்காறன்:-இன்றைக்கு பைப்பில தண்ணீர் வரையில்லக்கா. அதுதான் அரை லீற்றர்....

*****

தாய் :- சேர் என்ர பிள்ளையை மூன்று நாளாக் காணல்ல
பொலிஸ்: உங்கபிள்ள கறுப்பா, வெள்ளையா
தாய் :- பச்சப் பிள்ளை சேர்.

அருண் :- டே மணியம் இப்ப நீ பள்ளிக்கூடம் சேந்திட்டியாமே. நீ எது வர படிச்சா?
மணியம்:- மணியடிக்கும் வர படிச்சன்.
(அனுபியவர். எ.றொசாந்தன் கன்னியர்மட வீதி, சின்னக்கடை, பள்ளத்தாக்கு, மன்னார்)

*****

மதி: ஏய் சுமீ கன்னத்துல என்னடி காயமா? எந்த வண்ணக்கிளி செஞ்சுது:....?
சுமி: வயத்தெரிச்சலைக் கிளப்பாதேடி....!
மதி: என்னதான் ஆச்சு சொல்லு!
சுமி: முக அழகு கூடணும்னா, பாலாடையில் மஞ்சள் துாள் கலந்து முகத்துல தடவிக்கிட்டு அரைமணி நேரம் கழிச்சு கழுவவேணும்னு பேப்பரில படிச்சேன். ராத்திரி தடவி விட்டேன். சரி...அரை மணி நேரம் கழிச்சுதானே கழுவணும்னு அசதியில துாங்கிட்டேன். !
மதி: கதை சொல்லாம விஷயத்துக்கு வாடீ.....
சுமி: நான் அசந்து துாங்கிட்டிருந்தப்போ பாழாப்போன எலி சனியன் வந்து இப்படிப் பிறாண்டிட்டுப் போயிடுச்சு....!

*****

கருணாநிதியும், வாஜ்பாயும் உரையாடிக்கொண்டு இருக்கும்போது ஒரு காகம் வந்து வாஜ்பேயின் தலையில் அமர்ந்து இருந்தது. இதை கண்ட இரு இளம் பெண்களின் உரையாடல்.

அமலி: "ஏய் அங்க பாருடி வாஜ் பாய் கட்அவுட்ல அவரு தலை மேல காக்கா உக்காந்திருக்கு"
விமலி: அந்தக்காலத்துல நரிகிட்ட ஏமாந்த காக்கா மாதிரி எல்லாம் இப்போ இல்லேடி. இந்தக் காலத்துக் காக்கா எல்லாம் புத்திசாலியா இருக்கு. அதான் கலைஞர் தலைமேல உட்கார்ந்தா வழுக்கி விழுந்துடுவோம்னு பயந்து வாஜ்பாய் தலைமேலே உட்கார்ந்திருக்கு.....

*****

முதலாளி தொழிலாளி இருவருடைய உரையாடல்
தொழிலாளி :- ஐயா ஒரு நாள் லீவு வேணும் .
முதலாளி:- ஏன் ஒரு நாள் லீவு கேட்கிறா?
தொழிலாளி :- [illegible] செய்வதற்கு .....
(அனுப்பியவர் மு. ஜன்றீற்றா கற்கடந்த குளம்முருங்கன்) .

# மறைமாவட்ட மட்டத்திலான விவிலியப் போட்டி முடிவுகள் -2001

(போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு எமது வாழ்த்துக்கள். நடந்து முடிந்த போட்டிகளில் பேச்சு மற்றும் பாடல் போட்டி முடிவுகள் மட்டும் இங்கே தரப்படுகின்றன. கட்டுரை, சித்திரம் மற்றும் கவிதைப் போட்டி முடிவுகளை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள். ஒவ்வொரு குழுவிலும் முதலிடம் பெற்ற கட்டுரைகள் மன்னாவில் மாதா மாதம் பிரசுரிக்கப்படும். முதலிடம் பெற்ற கட்டுரையாளர்கள் தமது புகைப்படத்தை (பாஸ் போட் அளவு, கறுப்பு - வெள்ளை) உடனடியாக எமக்கு அனுப்பி வைக்கவும். பதிப்பாசிரியர்)

### மடு மறைக்கோட்டம் நீங்கலான போட்டிகள்

### பேச்சுப் போட்டி

| | பெயர் | பங்கு |
|---|---|---|
| **குழு 1** | | |
| 1ம் இடம் | ம. நவீன்ராஜ் பறுனாந்து | .பேசாலை |
| 2ம் இடம் | ம . ஜெனார்த்தனன் கொடுதோர் | வவுனியா |
| 3ம் இடம் | செ. அன்ரன் ருத்திரா | வவுனியா |
| 4ம் இடம் | ம. சியாம் றோயன் | முருங்கன் |
| 5ம் இடம் | யோ. விக்டறின் பீரிஸ் | தாழ்வுபாடு |
| **குழு 2** | | |
| 1ம் இடம் | வி. யெரோமி யேசுராஜ் | வவுனியா |
| 2ம் இடம் | அ. பிரியா | கற்கடந்தகுளம் |
| 3ம் இடம் | ம. ஜெர்மெயின் | பேசாலை |
| 4ம் இடம் | பி. மேரி அன்ரனீற்றா | முருங்கன் |
| 5ம் இடம் | றெ. றெயின்சி பீரிஸ் | பேசாலை |
| **குழு 3** | | |
| 1ம் இடம் | அ. யேசுராஜன் டபரேரா | கற்கடந்தகுளம் |
| 2ம் இடம் | சூ. அஞ்சலீற்றா அருணா பீரிஸ் | பேசாலை |
| 3ம் இடம் | எ. பற்மன் யெசன் | பம்பைமடு |
| 4ம் இடம் | ஞா. பெனுஸ்ராமேரி | மன்னார் |
| 5ம் இடம் | ம. ஆன் மதுசா | மன்னார் |
| **குழு 4** | | |
| 1ம் இடம் | அ. சுஜோ கிறிஸ்ரபெல் | பேசாலை |
| 2ம் இடம் | சி. பிரியதர்சினி | வவுனியா |
| 3ம் இடம் | ஜெ. றெனிக்கா குருஸ் | பேசாலை |
| 4ம் இடம் | பி. சூசையம்மா குருஸ் | தாழ்வுபாடு |
| 5ம் இடம் | சு. அருந்தவராஜா சில்வா . | கற்கடந்தகுளம் |

### பாடல் போட்டி

| | | |
|---|---|---|
| **குழு 1** | | |
| 1ம் இடம் | பெ. ஆன்மேரி | விடத்தல்தீவு |
| 2ம் இடம் | எஸ். பிரியங்கா | மன்னார் |
| 3ம் இடம் | செ. அன்ரன் ருத்திரா | வவுனியா |
| 4ம் இடம் | போ. மேரி யூஜின் | அளவக்கை |
| 5ம் இடம் | அ. அ. அனுசியா குருஸ் | பேசாலை |
| **குழு 2** | | |
| 1ம் இடம் | பி. லடிஸ்லஸ் | விடத்தல் தீவு |
| 2ம் இடம் | ச. மேரி ஜான்சி | கற்கடந்த குளம் |
| 3ம் இடம் | கீ. ஜெனற் தனுஜா | விடத்தல் தீவு |
| 4ம் இடம் | ச. விஜிதா | நானாட்டான் |
| 5ம் இடம் | பு. அருள்ராஜ் | கற்கடந்த குளம் |
| 5ம் இடம் | ஆன் செளமியா பீரிஸ் | வங்காலை |
| **குழு 3** | | |
| 1ம் இடம் | பொ. ஆன்சலோ பீரிஸ் | கற்கடந்தகுளம் |
| 2ம் இடம் | ஜெ. மேரிலீலி | தாழ்வுபாடு |
| 3ம் இடம் | பி. பிறேமினி | கோமரசன் குளம் |
| 4ம் இடம் | அ. டொனால்ட் | விடத்தல்தீவு |
| 5ம் இடம் | சி. றெஜித்தா | கோமரசன் குளம் |
| **குழு 4** | | |
| 1ம் இடம் | தே. றுபினா | நானாட்டான் |
| 2ம் இடம் | உ. சுபாசினி | மன்னார் |
| 3ம் இடம் | மா. சோபா மதிவதனி | நானாட்டான் |
| 4ம் இடம் | கீ. நிமலி | விடத்தல் தீவு |
| 5ம் இடம் | சி. தட்சாயினி | கோமரசன்குளம் |

### மடு மறைக்கோட்ட மட்டத்திலான போட்டிகள்

### பேச்சுப்போட்டி

| | | |
|---|---|---|
| **குழு 1** | | |
| 1ம் இடம் | பீ. திவ்யா | ஆட்காட்டி வெளி |
| 2ம் இடம் | சூ. வோல்டி | பண்டிவிரிச்சான் |
| 3ம் இடம் | பி. மதுசானி | பண்டிவிரிச்சான் |
| **குழு 2** | | |
| 1ம் இடம் | பி. தர்சினி அருள் தீபா | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | இ. நிரோசா | பண்டிவிரிச்சான் |
| 3ம் இடம் | வே. நொய்லின் | பண்டிவிரிச்சான் |
| **குழு 3** | | |
| 1ம் இடம் | ம. அருட் செல்வி | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | ம. அருள் றொசான் | பண்டிவிரிச்சான் |
| 3ம் இடம் | ம. தட்சாஜினி | தட்சனாமருதமடு |
| **குழு 4** | | |
| 1ம் இடம் | மி. நிசாந்திக் குருஸ் | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | பி. ஜெலிங்ரன் யூலியன் | ஆட்காட்டிவெளி |
| 3ம் இடம் | எலன் குமாரி | பண்டிவிரிச்சான் |

### பாடல் போட்டி

| | | |
|---|---|---|
| **குழு 1** | | |
| 1ம் இடம் | அ. அனோஜினி | ஆட்காட்டிவெளி |
| 2ம் இடம் | யோ. குயின்சி பியாட்டீஸ் | பண்டிவிரிச்சான் |
| 3ம் இடம் | அ. அன்ரனிற்றா யாழினி | பண்டிவிரிச்சான் |
| **குழு 2** | | |
| 1ம் இடம் | பி. பியூட்டி றென்சியா | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | இனிக்கா | மடு |
| 3ம இடம் | ச. செபமலர் | அடம்பன் |
| **குழு 3** | | |
| 1ம் இடம் | வி. வெலன்ரியா | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | சூ. நிலான் கிறிஸ்ரி | ஆட்காட்டிவெளி |
| 3ம் இடம் | யே. மொறின் சிந்துஜா | அடம்பன் |
| 3ம இடம் | ச. டயானா கொன்சி | ஆட்காட்டிவெளி |
| **குழு 4** | | |
| 1ம் இடம் | ம. சிந்துஜா | பண்டிவிரிச்சான் |
| 2ம் இடம் | செ. செல்வராணி | மடு |
| 3ம் இடம் | நோ. கௌந்தி | மடு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டத்தில்

## மரியாயின் சேனை

இலங்கையில் மரியாயின் சேனை முதன் முதலில் யாழ் மறைமாவட்டத்தில் 1936ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மூன்று ஆண்டுகளின் பின் மன்னார் மறைமாவட்டம் யாழ் மறைமாவட்டத்துடன் இருந்த பொழுது 1939ம் ஆண்டு அருட்திரு பி.ரி. ஜேம்ஸ் அ.ம.தி. அடிகளாரினால் மன்னார் பங்கில் ஆரம்பிக்கப்பட்டது. ஞாயிறு திருப்பலியின் பின் காலை 8.00 மணிக்கு வாராந்த பிரசீடியக் கூட்டம் நடைபெற்று வந்தது. பின் அங்கத்தினரின் வசதியீனம் காரணமாக காலக்கிரமத்தில் இயங்காது போய் விட்டது.

இதன் பின் 1948ம் ஆண்டு அருட் திரு எஸ். பீற்றர் அ.ம.தி அடிகளார் மன்னார் பங்குத்தந்தையாக வந்து இயக்கமற்று இருந்த மரியாயின் சேனையை திரும்பவும் ஆரம்பித்தார். இவரே தற்போது மன்னார் மறைமாவட்டத்தின் பேராலயமாக இருக்கும் - மன்னார் நகரில் அமைந்திருக்கும் புனித செபஸ்தியார் ஆலயத்தை புதிதாக கட்டியவர். இங்கு ஆரம்பித்து இயங்கிவந்த மரியாயின் சேனை யாழ் மாவட்ட கியூரியாவினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. முதலில் இங்கு ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு இரண்டுமாக மூன்று பிரசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பெண்கள் பிரசீடியத்தில் ஒன்று ஆங்கில மொழியில் நடைபெற்றது. இது அக்காலத்தில் மன்னார் அரசினர் வைத்தியசாலையில் பணிபுரிந்த பிரான்சிஸ்கன் சபை கன்னியர்களினால் இயக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து பல பிரசீடியங்கள் உருவாகி அதனை நிர்வகிக்கும் மேல் சபையான கியூரியாவும் ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக மன்னாரில் சுகாதாரப் பரிசோதகராக இருந்த என். டீ. யோசப் நியமிக்கப்பட்டார். மன்னார் மாவட்டத்தில் உள்ள பங்குகளில் பணியாற்றிய பங்குத் தந்தையர்களின் நல்ல மதிப்பைப் பெற்று சகல பங்குகளிலும் பல பிரசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல வளர்ந்தோர் பிரசீடியங்களும் இளைஞர் பிரசீடியங்களும் உருவாக்கப்பட்டதன் காரணமாக **அப்பொழுது** பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு மைக்கல் சாமி அ.ம.தி. அவர்களால் ஒரு இளைஞர் கியூரியாவும் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் தூர இடங்களிலும் சேனைப் பிரசீடியங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் காரணமாக மன்னாரில் பங்குத் தந்தையாக இருந்த அருட் திரு எம். இ. பயஸ் அடிகளாரின் காலத்தில் முருங்கனில் ஒரு கியூரியா ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலத்தில்தான் 1981ம் ஆண்டு மன்னார் மறைமாவட்டமாக உருவாக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மன்னார் கியூரியா, கொமிசிய நிலைக்கு 1982ஆம் ஆண்டு உயர்த்தப்பட்டது.

பிரசீடியம், கியூரியா, கொமிசியம் ,செனத்துாஸ், கன்சீலியம் என்பன மரியாயின் சேனையில் தரப்படுத்தப்பட்டுள்ள நிர்வாக அலகுகளாகும். பிரசீடியம் என்பது நான்கு அல்லது ஐந்திற்கு மேற்பட்ட சைனியங்களைக் கொண்ட அமைப்பாகும். குறிப்பிட்ட இடத்தில் உள்ள பல பிரசீடியங்களை நிர்வகிக்கவென கியூரியா என்ற மேற்சபை




அமைப்பு இயங்கும். இப்படியாக ஆக்கப்பட்ட கியூரியா என்னும் சபைகளை நிர்வகிக்கவென அதற்கு மேலான கொமிசியம் **என்னும்** மேல்சபை அமைப்பு இயங்கும். பல மறைமாவட்டங்களில் இயங்கும் கொமிசியம் என்னும் மேல்சபைகளை நிர்வகிக்கவென அதற்கு மேலான சபையான செனத்துஸ் என்ற ஒரு மேல்சபை இயங்கும். இச்சபை இலங்கையில் கொழும்பில் உள்ளது. இப்படியாக உலகின் பல நாடுகளிலும் இயங்கிவரும் செனத்துஸ் என்ற மேல் சபைகளை நிர்வகிக்கவென கன்சீலியம் என்னும் மேல்சபை உண்டு. இந்த கன்சீலியம் என்னும் மேல் சபை உலகின் அயர்லாந்து நாட்டில் உள்ளது.

எனவே பங்கு மட்டத்தில் பிரசீடியங்களும் மறைக்கோட்ட மட்டத்தில் அதன் மேல்சபையான கியூரியாவும் மறைமாவட்ட மட்டத்தில் கொமிசியமும் தேசீய ரீதியில் செனத்துஸ் என்ற அமைப்பும் சர்வதேசீய ரீதியில் கன்சீலியம் என்ற அமைப்பும் இயங்குகிறன.

மன்னார் கியூரிய கொமிசியமாக 1982ம் ஆண்டு உயர்த்தப்பட்டதும் அதன் முதல் தலைவராக கியூரியாவின் தலைவராக இருந்த திரு கே. எஸ் பெனடிற் அவர்கள் நியமிக்கப்பட்டார். பின் அவரின் அயராத சேவையின் பயனாக அக்காலத்தில் ஆன்ம இயக்குனராக இருந்த அருட்திரு எம். இ. பயஸ் அடிகளாரின் உதவியுடன் பேசாலை, விடத்தல் தீவு, வவுனியா, ஆகிய இடங்களிலும் மூன்று கியூரியாக்கள் உருவாக்கப்பட்டது. 1985ம் ஆண்டு மாசி மாதம் கொமிசியத் தலைவர் திரு சகோ.கே.எஸ். பெனடிற் அவர்கள் காலமானார். பின் அதனைத் தொடர்ந்து 1985ம் ஆண்டு பங்குனி மாதம் திரு சகோ. மரியதாசன் பீரிஸ் கொமிசியத் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் அருட்திரு எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் ஆன்ம இயக்குனராக இருந்த வேளை 1988ம் ஆண்டு மடு சிலாவத்துறை ஆகிய பங்குகளில் மேலும் இரண்டு கியூரியாக்கள் உண்டாக்கப்பட்டன.

எல்லாமாக மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள மரியாயின் சேனை மேல்சபையாக கொமிசியத்தின் கீழ் ஏழு கியூரியாக்களும் 70 பிரசீடியங்களும் இயங்கின. தற்பொழுது போரின் அனர்த்தங்களினால் மக்களின் இடம் பெயர்வினால் விடத்தல் தீவு, சிலாவத்துறை, முருங்கன் ஆகிய பங்கில் உள்ள கியூரியாக்கள் இயங்கமுடியாத நிலையில் உள்ளன. இதன் காரணமாக எமது மன்னார் மறைமாவட்டத்தில் 4 கியூரியாக்களும் 43 பிரசீடியங்களுமே இயங்கி வருகின்றன. சில காலத்தின் முன் போரின் விளைவால் எல்லாப் பிரசீடியங்களும் செயல் இழந்த நிலையில் இருந்து பின் மறுபடியும் ஊக்குவிக்கப்பட்டு சேனையானது எமது மறைமாவட்டத்தில் தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகின்றன. தற்பொழுது இயங்கமுடியாது இருக்கும் பல சைனியங்களும் மூன்று கியூரியாக்களும் பெருநிலப்பரப்பைச் சார்ந்தவைகளேயாகும். சோர்வுற்றிருந்த மரியாயின் சேனையை திரும்பவும் ஒன்றுகூடவைத்து இயங்கச் செய்ய அயராது உழைத்தவர்கள் கொமிசியத் தலைவர். எஸ். மரியதாசன் பீரிஸ். மற்றும் மன்[illegible] சைனியத்தின் தலைவரும் முன்னைய கொமிசிய[illegible]ளருமான திரு சகோ. எம் . மரியதாசனும் ஆவர். அவர்களுககு பக்கபலமாக வங்காலை சைனியங்களின் தலைவர்களான திரு. சகோ. அதிரியான் சோசை, திரு அல்போன்ஸ் சில்வா, பேசாலை மடுமாதா கியூரியாவின் முன்னைய தலைவர் திரு. சகோ. செபமாலைக் குருசுமாவர்.

இப்படியாக மரியாளின் அருள் பெற்று மன்னார் மறைமாவட்டம் முழுதும் மரியாளின் சேனை சுடர் விட்டு போர்க்கால சூழ்நிலையிலும் வளர்ச்சி பெற்றுவருவது அந்த இரக்கமுள்ள தாயின் கருணையே. இத்தாயினுடைய துணை கொண்டு சேனையார் அனைவரும் செபம் மற்றும் சேவை என்னும் பண்புடன் பணி செய்து வருகின்றனர். எனவே அன்னையின் அணியில் அனைவரும் அன்பு கொண்டிணைந்து அன்புப் பணி புரிந்து ஆண்டவரின் அரசைப் பரப்ப வாருங்கள் என அனைவரையும் அழைக்கின்றோம்.

கொமிசியம், மன்னார்.



## வாழ்வு தரும் வார்த்தை

# மன்னிப்புக் கொடுப்போம் மன்னிப்புப் பெறுவோம்



அருள் பணியாளர் நேசன்

"மனிதருடைய குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களாகில் உங்கள் வானகத் தந்தை உங்களையும் மன்னிப்பார்" (மத்தேயு 6:14)

நீ செய்த பாவங்களுக்காக உடனுக்குடன் கடவுள் உன்னைத் தண்டித்தால் உன்னால் ஒருநாள்கூட முழுமையாக வாழ முடியாது. நாம் எல்லோரும் பாவிகள், பலவீனர்கள். இறைவனுடைய இரக்கத்தை மன்னிப்பை எதிர்பார்த்து நிற்பவர்கள். நமது குற்றங்களை இறைவன் மன்னிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் நாம் அதே மன்னிப்பை நம்மோடு வாழும் அயலவர்களுக்கு வழங்க மறுக்கின்றோம். அல்லது மனமில்லாமல் இருக்கின்றோம். இது என்ன விதத்தில் நியாயமாகும்? மற்றவர்களை மன்னிக்க மனமில்லாத நாம் எப்படி ஆண்டவரிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்க முடியும்? மன்னிக்க மறுத்த பணியாளர் உவமையில் இயேசு இந்த உண்மையை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்துகின்றார் (மத். 18: 21- 35). தன் தலைவனிடமிருந்து மன்னிப்பையும் இரக்கத்தையும் பெற்ற பணியாளர் தன் உடன் பணியாளரை மன்னிக்க மறுக்கின்றான். இதை கேள்வியுற்ற தலைவன் அவனை தண்டிக்கின்றான். "உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்காவிட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்" என்று கூறி இயேசு இந்த உவமையை நிறைவு செய்கின்றார். மன்னிப்பது மனிதனின் முதிர்ச்சி பெற்ற நிலையின் வெளிக்காட்சி. பழிவாங்குபவன் மிருகம் என்ற முறையில் பலசாலி! மன்னிப்பவன் மனிதனின் என்ற முறையில் பலசாலி! மன்னிப்பவன் கையாலாகாதவன் என்று இன்று கருதப்படுகிறான். காரணம் உண்மையான வளர்ச்சி எது என்று உலகம் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. பழிவாங்கும் மனிதன் மிகப் பரிதாபத்திற்குரியவன். இன்னும் அவன் வளரவில்லை. மனித வளர்ச்சி அடையவில்லை. அவன் - அவனாக செயல்படவில்லை அடுத்தவனால் ஆட்டிப்படைக்கப்படுகிறான். இவன் அடித்தான் ஆகவே அவன் அடிக்கிறான்.

பொறுமையிலும் உயர்ந்த தவமில்லை
திருப்தியிலும் உயர்ந்த இன்பமில்லை
அவாவிலும் பெரிய தீமை இல்லை
கருணையிலும் பெரிய அறமில்லை
மன்னித்தலிலும் ஆற்றல் மிக்க ஆயுதமில்லை

என்கிறார் சீக்கிய மத ஸ்தாபகரான குரு நானக் அவர்கள்.

நாய் எமக்குக் கடித்தால் நாம் நாயைத் திருப்பிக் கடிப்போமா?

மற்றவன் எனக்குச் செய்ததையே நானும் அவனுக்குச் செய்தால் அவனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நான் அவனை மன்னிப்பதனால்தான் நான் அவனைப்போல் இல்லை - அவனை விட உயர்ந்தவன் என்று காட்டலாம். மன்னிப்பது கோழையின் செயல் அல்ல அது வீரனின் செயல்.



### "நான் அப்போதே துடைத்து விட்டேனே!"

மன்னிப்பவனின் வலிமைக்கு முன் - எந்த மிருக பலமும் வீழ்ச்சியுறும். ஒரு முறை புத்தரின் பேச்சைப் பிடிக்காத இளைஞன் ஒருவன் அவரைக் காறி உமிழ்ந்தான். அவரோடிருந்தவர்கள் அவனைக் கோபத்தோடு தாக்க முயற்சித்தனர். புத்தர் அவர்களைக் கையடக்கி எச்சிலைத் துடைத்து விட்டார். இளைஞன் எழுந்து போய்விட்டான். இரண்டு தினங்கள் கடந்தது. அவ்விளைஞன் மனசாட்சியின் குத்தல் தாங்க முடியாமல் புத்தரிடம் மன்னிப்பு கேட்டான். "எதற்காக" புத்தர் கேட்டார். "நான் இரண்டு நாட்களுக்கு முன் உங்கள் மீது உமிழ்ந்தேனே... ..." என்றான். "ஆனால் நான் அப்போதே துடைத்து விட்டேனே" புத்தர் சொன்னார்.

கசப்புக்களைக் கழுவி விடுவதும், காழ்ப்புணர்வுகளைக் களைந்து விடுவதும் மன நலத்தைக் காட்டும். மறக்க வேண்டியவைகளை மறக்காமல் நினைத்திருப்பதும், மறக்க வேண்டாதவைகளை மறந்து விடுவதும்தான் இந்த உலகத்தின் துன்பங்களுக்கு காரணம்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்றார் வள்ளவர். அதாவது நமக்கு தீமை செய்கின்றவர்களை அவர்கள் வெட்கப்படும்படியாக மன்னித்து விடவேண்டும் என்பது வள்ளுவரின் வார்த்தை. பிறர் குற்றங்களை நாம் மன்னித்தால்தான் இறைவனும் நம் குற்றங்களை மன்னிப்பார். பரலோக மந்திரத்திலே நாம் என்ன சொல்லுகிறோம்? - "எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல எங்கள் பாவங்களை மன்னித்தருளும்" என்கிறோம்.

"எங்களுக்குத் தீமை செய்கின்றவர்களை நாங்கள் மன்னிப்பதுபோல...." என்று சொன்னால், அதை நம்முடைய வாழ்வில் செய்தால் மட்டுமே - அதாவது பிறரை நாம் மன்னித்[illegible] மட்டுமே - நம்முடைய பாவங்களை மன்னிக்கும்படி இறைவனிடம் கேட்க முடியும். பிரான்சிஸ் அசிசியின் சமாதான செபத்தில்கூட இதையே சொல்லுகிறோம். "கொடுப்பதன் முலம்தான் பெற்றுக்கொள்ள முடியும் ... மன்னிப்பதன் மூலம்தான் மன்னிப்படைய முடியும்"

"ஒருவரையொருவர் பொறுத்துக் கொள்ளுங்கள் - ஒருவரைப் பற்றி ஒருவருக்கு ஏதாவது முறையீடு இருந்தால் மன்னியுங்கள் ஆண்டவர் உங்களை மன்னித்தது போல நீங்களும் மன்னிக்க வேண்டும்" (கொலோ 3: 13) என பலடியார் எழுதுகிறார்.

### "மரம் மாங்காய் கொடுத்தது! நான்?"

அமைச்சர் மற்றும் படைவீரருடன் காட்டில் வேட்டையாட வந்த ராஜாவின் நெற்றியை ஒரு கல் தாக்கியது. அனைவரும் பதறினார்கள். அடிபட்டது ராஜாவாயிற்றே! ஒரு பையன் துாரத்தில் நின்று கொண்டிருந்தான். ராஜா முன் பையன் நிறுத்தப்பட்டான்.

ராஜா, "ஏன் காட்டுக்கு வந்தாய்?" பையன், "மாங்கா அடிக்க"

றாஜா, "அதுக்கு என்ன செஞ்சா?" பையன் - "கல்லால மாங்காயப் பார்த்து அடிச்சன்" ராஜா, "எத்தனை மாங்கா கிடைச்சது?" பையன் - "ஆறு" ராஜா - "சரி போ"

அமைச்சர் ஆச்சரியத்துடன் ராஜாவைப் பார்த்தார். "மரத்துக்கு ஐந்து அறிவு மட்டுமே உண்டு. ஆனால் மனிதனுக்கோ ஆறு அறிவு உண்டு. ஐந்து அறிவுள்ள மரம் தன்மேல் கல் எறிந்த பையனுக்கு ஆறு மாங்காய் கொடுத்தது. ஆறு அறிவுள்ள நான் மனிதன் என்பதால் மன்னிப்புக் கொடுக்கிறேன்." என்றார் ராஜா!

"மனத்தில் பகைமையை அடக்கி வைத்திருப்பது நேரடியான போரைவிடக் கொடியது" என்றார் காந்தியடிகள்.

நீங்கள் மன்னியாது விட்டால் உங்களையே நீங்கள் அழித்துக் கொண்டவராவீர்கள். ஆம்! இது உண்மை! மன்னிக்க முடியாமல் கடினமான மனப்பான்மையோடு இருப்பதால்தான் பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. குடல் புண், தலையிடி கட்டிகள்...... என்று இந்த பட்டியல் நீண்டுகொண்டு செல்கிறது என உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அதனால்தான் இறைவர்த்தை அறிவிக்கப்படும்பொழுது குணமாக்கல் தியானங்களின்போது மற்றவர்களை நாம் மன்னிக்கின்ற அந்தப்பொழுதில்தானே நாம் பல்வேறு நோய்களில் இருந்து சுகம் பெறுகின்றோம். அற்புதங்கள் நடக்கின்றன. ஆம் மன்னிப்பின் மகத்துவத்தை உணருவோம். மன்னிப்பு கொடுப்போம் மன்னிப்பு பெறுவோம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சிலாவுடன் நேர்காணல்

மகிழ்ச்சியானதொரு மதிய உணவு வேளை! மன்னார் திருக்குடும்ப கன்னியர் இல்லம்! மன்னா சார்பாக திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத் தலைவி அருட்சகோதரி அன்சிலா ஜேம்ஸ் அவர்களைச் சந்தித்தோம். ஆலோசனைச் சங்க அமர்வுகள், கன்னியர் இல்லங்களின் தரிசிப்பு, இவற்றின் மத்தியில் மகிழ்ச்சியுடனும், ஆவலுடனும், அவரும் அவரது ஆலோசகர்களும் இந்நேர்காணலில் கலந்து கொண்டனர்.

**1. திருக்குடும்ப சபையின் அருங்கொடை (charism) பற்றி கூறுவீர்களா?**

"குடும்பமாக இருந்து, குடும்பத்தை அமைத்தல்" என்பதே எமது அருங்கொடை. அதாவது சிதறுண்ட மக்கள் அனைவரையும் ஒரே குடும்பத்தில் மீண்டும் ஒன்று சேர்க்கும் தந்தையையும் அவரது திட்டத்தையும் வெளிப்படுத்தல். அனைவரையும் ஐக்கியத்தில் வாழக்கூடியவர்களாக ஆக்கும் கிறிஸ்துவின் பணியை ஆற்றுவதன் மூலம் குடும்பத்தைக் கட்டியெழுப்புதல். எல்லாச் சூழலிலும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்தல். இயேசு, மரி, சூசையினதும், ஆதிக்கிறிஸ்தவ குழுமங்களினதும் மாதிரிகையைப் பின்பற்றல். எம்மிடையேயும், எமது பணித்தளங்களிலும், சமுதாயத்திலும், உலகிலும், உறவை வெளிப்படுத்தி ஐக்கியத்தை வளர்த்தல் ஆகியவையே சபை ஸ்தாபகரின் இலட்சியமாகும்.

**2. யாழ். மன்னார், மறைமாவட்டங்களில் ஏனைய துறவறசபைகளைவிட அதிகளவில் பரந்து, விரிந்து, வியாபித்திருக்கும் திருக்குடும்ப சபை பற்றி கூறுவீர்களா? இல்லங்கள், துறவிகளின் எண்ணிக்கை...?**

இலங்கை மண்ணில் முதன் முதலில் ஆதாவது 1862ம் ஆண்டில் கால்பதித்த பெண் துறவிகள் திருக்குடும்ப சபையினரே என்பது தங்களுக்கு நினைவிருக்கலாம். அவர்களை அழைத்து வந்தவர் அன்றைய யாழ் ஆயர் மேதகு சமேரியா ஆண்டகையவர்கள். அவ்வாறு வருகை தந்தவர்கள் முதலில் யாழ் நகரிலும் பின்னர் இளவாலையிலும், வடபகுதியைச் சார்ந்த ஏனைய பல இடங்களிலும் மக்களின் அழைப்பை ஏற்று பணியாற்றச் சென்றனர். இங்கிருந்தே தென்பகுதிக்கும் சென்றனர். இன்று தென் மாகாணச் சகோதரிகள் தவிர இலங்கையிலும் பரவலாக ஆறு மறைமாவட்டங்களில் எமது யாழ்மாகாணச் சகோதரிகள் பணிபுரிகின்றார்கள். இவற்றில் யாழ் மன்னார் மறைமாவட்டங்களில் 28 இல்லங்களில், ஏறக்குறைய 170 சகோதரிகள் பணியாற்றுகின்றனர். எனவே இலங்கையில் திருக்குடும்ப சபையின் பிறப்பிடம் யாழ், மன்னார் மறைமாவட்டங்களே யென்றால் அது மிகையாகாது.



திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத் தலைவியும் அவருடைய ஆலோசகர்களும்
இடமிருந்து மூன்றாவதாக நிற்பவர் மாகாணத் தலைவி அருட்சகோ. அன்சிலா அவர்கள்

**3, திருக்குடும்ப துறவியரின் பொதுவான பணிபற்றியும் போர்க்காலத்தில் அவர்கள் ஆற்றும் சிறப்புப்பணி பற்றியும் கூறுவீர்களா?**

எமது நிறுவுனராகிய பீற்றர் பியன்வெனு நோஜ அடிகளார் பிரான்சியப் புரட்சியின் போது எம் சபையை நிறுவினார். இன்றும் நாம் காலத்தின் தேவைகளுக்கேற்ப புதிய பணிகளைக் கையேற்கின்றோம். அதேவேளை ஒரு சில பாரம்பரியப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. அன்றேல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. எமது முதன்மையான பணி கல்விப்பணி! அது தவிர தாதிப்பணி, சமூகப்பணி, மறைக்கல்வி, பாலர் கல்வி, தொழில் வழிகாட்டல், வைத்தியசாலைகளில் நோயாளரைத் தரிசித்தல், அருட்சாதன ஆயத்தங்கள், விடுதிச்சாலை, அனாதை இல்லங்கள் போன்றவற்றை நடத்துதல், மனவளர்ச்சி குன்றியோர் பணி, ஊனமுற்றோர்பணி, குடும்பநல மேய்ப்புப்பணி, உளவளத் துணை வழங்கல், பங்குப்பணி போன்ற பல்வேறு பணிகளை நாம் காலத்திற்கு காலம் கையேற்று ஆற்றி வருகின்றோம். போர்க் காலத்தில் சிறப்பாக உளவளத்துணை வழங்கல், ஊனமுற்றோர்பணி, தலைமைத்துவப் பயிற்சி, இடம்பெயர்ந்தோர் மத்தியில் பணி, வலுவிழந்த மக்களை அவர்களது இருப்பிடங்கட்குச் சென்று தரிசித்து உடல், உளத் தேவைகளை நிறைவுசெய்தல், பெண் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளுக்கு எமது பங்களிப்பை நல்கி பெண்களின் மகத்துவத்தை ஊக்கவித்து உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகளில் விசேட கவனம் செலுத்துகின்றோம்.

**4, இன்றைய துறவிகள் - மக்கள் உறவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

முன்னைய காலத்திலும் பார்க்க இன்று துறவிகள் - மக்கள் உறவு கூடுதலாக இருக்கின்றது என்பது உண்மை. (எனினும் உறவிரும் பார்க்க உதவி நாடிவருவோர் தொகை அதிகம்.) இவ்வாறான தொடர்பு இருக்கும்போது துறவிகளின் வாழ்வு, பணி, உறவுகள் பற்றி மக்கள் கூடுதலாக அறிகின்றார்கள். இந்நிலையில் அனைத்தும் சாட்சியமான நிகழ்வுகள், வாழ்க்கை முறைகள் என்றும் கூறிவிட முடியாது. எதிர்ச்சாட்சியமான நிகழ்வுகளையும் மக்கள் காண்கிறார்கள்.

(தொடர்ச்சி பக்கம் 8)

# பங்குச் செய்திகள்

பங்குச் செய்திகளை அனுப்பும் பணியாளர் கவனத்திற்கு!:
உங்கள் பங்குச் செய்திகளை சுருக்கமாகவும் சுவையாகவும் எழுதி அனுப்புங்கள். செய்திகளில் ஒருவித புதுமையும் - தனித்தன்மையும் இருக்க வேண்டும். வருடா வருடம் நடக்கும் ஆலயத் திருவிழா மற்றும் வருடாந்த நிகழ்வுகளில் என்ன புதுமையும் தனித் தன்மையும் இருக்க முடியும்? எனவே உங்கள் பங்குகளில் இடம்பெறும் அபூர்வமான- புதுமையான தனித்தன்மையான நிகழ்வுகளை சுருக்கமாக சுவையாக மற்றவர்கள் விரும்பி வாசிக்கக்கூடிய விதமாக எழுதி அனுப்புங்கள். ஒவ்வொரு பங்குச் செய்தியும் பங்குத் தந்தையின் ஒப்புதலோடு அனுப்பப்பட வேண்டும்.
(பதிப்பாசிரியர்)

## அளவக்கையில் சிறப்பு நிகழ்வுகள்

அளவக்கை பதிய பங்காக பிரிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகிக் கொண்டிருக்கின்றது. இக்கால கட்டத்தில் இப்பங்கின் வளர்ச்சியானது பல வழிகளிலும் முன்னேற்றமடைந்து செல்கின்றது. இந்த வருடம் இப்பங்கானது பலவிதமான ஆன்மீக காரியங்களை செயற்படுத்தி உள்ளது. பங்குத் திருவிழாவையொட்டி பங்குத் தந்தை பெனோ அடிகளாராலும் அருட்தந்தை சீமான் மரியதாசன் அடிகளாராலும் ஆயத்த வழிபாடுகள் இடம்பெற்றன. பின்பு ஆயர் அவர்களினால் உறுதிப்பூசுதல் எனும் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது.அதனைத் தொடர்ந்து புதிதாக கட்டப்பட்ட பங்குப் பணிமனை ஆயர் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.
இதன் பின் 2.9.2001 அன்று பங்கு திருவிழா மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் பங்கின் சிறார்களுக்கு பங்குத்தந்தை பெனோ அடிகளாராலும் அருட்தந்தை கொடுதோர் அடிகளாராலும் முதன் நன்மை வழங்கப்பட்டது. அன்று மாலை பங்கின் அனைத்து ஆலயங்களினாலும் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் எமது பங்குத் தந்தையால் நெறியாள்கை செய்யப்பட்ட வேதசாட்சிகளின் வரலாற்றைக்கொண்ட வித்துக்கள் எனும் நாட்டுக்கூத்து மேடையேற்றப்பட்டது. இக் கலைநிகழ்விற்கு அருட்தந்தை தேவசகாயம் பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

ச. மைதிலி, அளவக்கைப் பங்கு

## பெரிய முறிப்பு ஆலயத் திருவிழா

கடந்த 17.09.2001 அன்று மாலை பெரியமுறிப்பு புனித சிந்தாத்துரை மாதா ஆலயத் திருவிழா ஆரம்ப நாள். அன்று கொடியேற்றத்துடன் தொடர்ந்து ஐந்து நாட்கள் வழிபாடுகள் நடைபெற்றது. திருவிழாவிற்கு முன் தினம் தேவநற்கருணை வழிபாடு அருட்தந்தை மரியதாசன் மற்றும் அருட்தந்தை ஸ்ரீபன்ராஜா ஆகியோரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. அந்த வழிபாட்டில் கிராம மக்கள் அனைவரும் வெள்ளை ஆடை அணிந்து நற்கருணைப் பவனியில் பயபக்தியாகக் கலந்து கொண்டார்கள். 22ம் திகதி சனி காலை 7.30 மணியளவில் புனித சிந்தாத்துரை மாதா ஆலயத் திருவிழாத் திருப்பலி புதிய வாழ்வுதய இயக்குனர் அருட் தந்தை யேசுராஜா தலைமையில் அருட்தந்தை சீமான் மரியதாசன், அருட்தந்தை ஸ்ரீபன் ராஜா ஆகியோருடன் நிறைவேற்றப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து அன்னையின் திருச்சுருபம் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அதில் ஏராளமான மக்கள் பங்கெடுத்தனர்.

அ. ஷறோமி, பெரிய முறிப்பு

## கல்நாட்டின குளத்தில் அருட்சகோதரர்கள்

கோமரசன் குளம் பங்கின்கீழ் இயங்கிவரும் கல்நாட்டினகுளம் சதாசகாய மாதா ஆலயத்தில் அருட்சகோதரர்கள் வின்சன் (யாழ்ப்பாணம்) ஜோய், (பேசாலை) ஆகியோர் இருபது நாட்கள் தங்கியிருந்து பல்வேறு பணிகளில் ஈடுபட்டனர். மாணவர்களுக்கு மறை சார்பான அறிவு புகட்டுதல், பாடற்பயிற்சி, வழிபாடுகள், உறுதிப்பூசதல் வகுப்பு, இளைஞர் யுவதிகளுக்கு ஒரு நாள் பாசறை போன்றவற்றை நடத்தினார்கள். பாசறையை எமது பங்குத்தந்தை அருள்நாதன் அடிகளார் ஆரம்பித்து வைத்தார் அருட்சகோதரர்களுடன் அன்புக் கன்னியர் சகுந்தலா, யசிந்தா, ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

அ. இருதய நாயகி (சித்திரா)

## கீளியன் குடியிருப்பில் பெரும் விழா

கீளியன் குடியிருப்பு பங்கில் கடந்த 9.9.2001 அன்று முப்பெரும் விழா ஆயரின் தலைமையில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. முதல் நிகழ்வாக ஆவியின் அருட்கொடை வழங்குதல் நடை பெற்றது. 52 உறுப்பினர்களுக்கு ஆயர் அவர்கள் உறுதிப்பூசுதல் அபிசேகம் செய்தார். அடுத்த நிகழ்வாக எமது பங்கின் பங்குப் பணிமனை ஆயர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அடுத்து எமது பங்கின் முதலாவது பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. அதனை ஒட்டி கலைநிகழ்வுகள் இடம் பெற்றன. அதில் ஏழு கிராம மக்களும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர். சிறப்பு நிகழ்ச்சிகளாக மன்னார் வாழ்வுதயத்தினரால் சமாதானத்தை மையப்படுத்திய நாடகம் ஒன்று நடந்தேறியது. அதனைத் தொடர்ந்து அளவக்கைப் பங்கு மக்கள் மன்னார் மண்ணில் மரித்த வேதசாட்சிகள் வரலாறான வித்துக்கள் என்ற நாட்டுக்கூத்தினை மிகவும் சிறப்பாக நடாத்தினர். இந்நிகழ்வுகளை நெறிப்படுத்தி நடாத்திய எமது பங்குத்தந்தை அருட் திரு சீமான் மரியதாசன் அடிகளாருக்கும், அருட் சகோதரி பெக்மான்ஸ் அவர்களுக்கும் எமது நன்றிகள்.

ஜெ. நிலாஜினி தற்குருஸ், பருத்திப்பண்ணை.
தலைமன்னார்.

## பெரிய கோமரசன் குளத்தில் உறுதிப்பூசுதல் பாசறை

9.9.2001 அன்று அருட்பணியாளர் அருள் நாதன் தலைமையில் மூன்று கிராம மாணவ மாணவிகளுக்கான உறுதிப்பூசுதல் பாசறை இடம் பெற்றது. இந்த நிகழ்வை சிறப்பிக்க அருட்தந்தை டெஸ்மன் குலாஸ் மற்றும் நிரந்தர மறைவாழ்வுப் பணியாளர்கள் சவிரி, செபஸ்ரியான்பிள்ளை, மரிய செல்வம் என்பவர்கள் கலந்து கொண்டனர். அத்தோடு மறைக்கல்வி ஆசிரியர்கள் உறுதிப்பூசுதல் எடுக்கும் பெற்றோருக்கும் சிறிது இறைவார்த்தை விளக்கம் கொடுக்கப்பட்டது. உறுதிப்பூசுதல் எடுப்பதன் கருத்தும் விளக்கிக் கூறப்பட்டது.

அ. இருதய நாயகி (சித்திரா).

## கற்கிடந்த குளத்தில் மாதாவின் திருச்சுரூபம் அன்பியங்களுடாக பவனி

கற்கிடந்த குளத்தில் பதினொரு அன்பியங்கள் உள்ளன. ஒவ்வொரு அன்பியத்திலும் ஒரு வீட்டில் மாதாவின் திருச்சுருபம் வைக்கப்பட்டது. இந்த பதினொரு நாட்கள் வழிபாடானது 1.8.2001 திருப்பலியுடன் ஆரம்பமாகியது. திருப்பலி முடிந்தவுடன் திருச்செபமாலை சொல்லப்பட்டு மாதாவின் திருச்சுருபம் பங்குத் தந்தையினால் எடுத்துவரப்பட்டு சிறுவர்கள் முன்செல்ல அதனைத் தொடர்ந்து இளைஞர் யுவதிகள் அதனைத் தொடர்ந்து தந்தைமாரும் அடுத்து தாய்மாரும் அதனைத் தொடர்ந்து மாதாவின் திருச்சுருபத்தை ஏந்தியவராக பங்குத்தந்தையும் வந்தார். சோடினைகளும் தோறணங்களும் கலகலக்க அவற்றினூடாக அமைதியான மாலைப் பொழுதில் மாதாவின் பாடல்களுடன் திருச்சுரூபம் பவனி வந்தது. அன்று ஐந்தாம் அன்பியத்தில் ஒரு இல்லத்தில் அந்த அன்பியக் குடும்பங்கள் ஒன்றுகூடி நின்று அன்னையை ஆராத்தி எடுத்து தூபம் காட்டி வரவேற்றனர். எமது பங்குத்தந்தையானவர் தாம் ஏந்தி வந்த அன்னையின் சுருபத்தை அந்த இல்லத்து அன்னையிடம் ஒப்படைக்க அந்த அன்னை அன்னையர்க்கெல்லாம் அன்னையானவளை ஏந்தியவாறு தனது இல்லத்தில் சென்று அன்னைக்கென்று அலங்கரிக்கப்பட்ட அறையினுள் திருச்சுருபத்தை வைத்தாள். பின்பு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து பிரார்த்தனைகளும் மன்றாட்டங்களும் ஆர்ப்பரிப்புக்களும் நடைபெற்றன. கூடுதலாக சமாதானத்துக்காக வேண்டுதல் கேட்கப்பட்டது.
இறுதி நாள் அன்று அலங்கரிக்கப்பட்ட உழவு இயந்திரத்தில் அன்னையானவள் ஆலயம் நோக்கி பவனி வந்தாள். எவ்வாறு ஒரு தாயானவள் தமது அன்புப் பிள்ளைகளை முன்னே விட்டு பின்னே செல்வாளோ அதேபோன்று எல்லோருக்கும் அன்னையானவள் தமது பிள்ளைகள் அனைவரையும் முன்னே விட்டு தோரணங்களாலும் சோடினைகளாலும் அலங்கரிக்கப்பட்ட பிரதான வீதியினூடாக தனது இல்லத்தை நோக்கி தமது பிள்ளைகளை அழைத்துச் சென்றாள். பாடல்களோடும் செபங்களோடும் சென்ற அமைதியான இந்த பவனிக் காட்சியைப் பார்க்கும்போது எல்லோருடைய கண்களிலும் கண்ணீர் ததும்பின. இருள் உலகை கவ்விக் கொண்டிருக்கின்ற அமைதியான மாலைப் பொழுதில் மின்மினி பூச்சிகள் மின்னுகின்றதுபோல அவருடைய உடம்பெல்லாம் மின் விளக்குகள் மின்னிக் கொண்டிருந்தன. அவளுடைய புன்னகையும் இனிதான பார்வையும் அனைவரையும் அவள் பக்கமாக ஈர்த்துக் கொண்டிருந்தது. அவளை உற்று நோக்கும் போதெல்லாம் அரவணைக்கின்ற தாயாக காட்சி தந்தாள் ஆலயத்தின் முன்றலிலே அன்னையானவள் நிறுத்தப்பட்டாள். ஆலயத்துக்கு சென்றவுடன் பதினைந்து நிமிட இடைவேளையின் பின் திருப்பலி ஆரம்பமாகியது. திருப்பலியை அருட்தந்தை அன்புராஜ் அடிகளாரும் எமது பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளாரும் சேர்ந்து ஒப்புக் கொடுத்தனர். அருட்தந்தை அன்புராஜ் அடிகளார் தமது மறையுரையில் தாய்மையின் மகத்துவத்தை விளக்கிக் கூறினார். அவருடைய அமைதியான அடக்கமான மறையுரை அன்னையர்க்கு மட்டுமல்ல எல்லோர்க்குமே வாழ்க்கைப் பாடமாக அமைந்தது.

பி. கக்கனின்
தரம் -12 (கலைப்பிரிவு) கற்கிடந்த குளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## சிந்தனைக் கதை

### வாய்ப்புகள்



ஒரு குளத்தருகே கொக்கு ஒன்று வெகு நேரமாகக் காத்துக்கொண்டிருந்தது. எத்தனையோ மீன்கள் வந்தும் அவற்றைப் போகவிட்டுக்கொண்டிருந்தது. இதைக் கண்டு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த இன்னுமொரு பறவை கொக்கைப் பார்த்துக் கேட்டது "உனக்கு பசிக்கவில்லையா ஏன் வருகிற மீன்களையெல்லாம் கவனிக்காததுபோல் இருக்கிறாய்?"

கொக்கு சொன்னது "எனக்கு கருவாடு தின்ன ஆசை. என்றாவது ஒருநாள் இங்கு வரட்சி வரப்போகுது. அப்போது இந்த ஓடை வற்றிவிடும். அப்போது இந்த மீன்களெல்லாம் செத்து வெயிலில் காய்ந்து கருவாடு ஆகிவிடும். அப்போது நான் ருசித்து தின்பேன்" என்று.

கடைசியில் கொக்குதான் பசியில் வாடி மெலிந்து செத்தது. இதுபோலதான் பலர் தங்கள் வாய்ப்புக்களை நழுவ விட்டு விட்டு வாழுகின்றனர். வாழ வேண்டிய காலத்தில் வா்ழாமல் முடியாத காரியங்களை கற்பனையில் கண்டு ஏங்கி வாழுகிறார்கள். கடைசியில் நிகழ்காலமும் இல்லாமல் எதிர்காலமும் இல்லாமல் மடிகிறார்கள்.

## சிரிக்க சிந்திக்க



ஒரு விமானத்தில் பலநாட்டு அரசியல்வாதிகள் ஒன்றாகப் பயணம் செய்து கொண்டிருந்தனர். திடீரென்று விமானியிடமிருந்து அறிவிப்பு வந்தது! "நமது விமானத்தின் எஞ்சின் பாரம் தாங்காமல் மிகவும் திணறுகிறது. யாராவது மூன்றுபேர் தங்கள் உயிரைப்பற்றிக் கவலைப்படாமல் வெளியே குதித்து மற்றவரைக் காப்பாற்ற முன்வர வேண்டும்" என்றார்.

உடனே அமெரிக்க அரசியல்வாதி ஒருவர் எழுந்து "அமெரிக்கா வாழ்க வாழ்க" என்று சொல்லிவிட்டு குதித்தார். அடுத்து ஒரு ரஸ்யாக்காரர் "ரஸ்யா வாழ்க கம்யூனிஸ்ட்கள் ஒழிக" என்று கோஷம் எழுப்பியபடியே வெளியே குதித்தார். அங்கே இருந்த தமிழ்நாட்டு அரசியல்வாதி ஒருவருக்கும் உணர்ச்சி கொப்பளித்தது. உடனே எழுந்து நின்றவர் விமானப் பணிப்பெண்ணிடம் பயணிகளின் பெயர்ப்பட்டியலைக் கேட்டார். கொண்டுவந்து கொடுத்ததும் உடனே பேச ஆரம்பித்தார் "இங்கே விமானம் ஓட்டிக் கொண்டிருக்கும் அருமை அண்ணன் பைலட் அவர்களே! விமானப் பணிப்பெண் அருமைச் சகோதரி அவர்களே, என்று ஆரம்பித்து லிஸ்டில் உள்ள ஒருத்தர் பேரையும் விடாமல் வாசித்து விட்டு அடுத்து காந்தியடிகளின் தியாக உணர்வு பற்றிப் பேச ஆரம்பித்தார். திடும் என்று ஒரு சத்தம் ... திரும்பிப் பார்த்தால். ...இவரது இம்சை தாங்காமல் பைலட் தரையை நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்தார்.

## இளையோரே உங்களது இளமைப் பருவம் ......

இளையோரே! இளமைப்பருவம் மகிழ்ச்சியோடிருப்பதற்கே. "இளமையின் நாள்களில் உள்ளக் களிப்புடனிருங்கள். மனம் விரும்புவதைச் செய்யுங்கள். கண்களின் நாட்டத்தை நிறைவேற்றுங்கள். ஆனால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் உரிய தீர்ப்பைக் கடவுள் வழங்குவார் என்பதை மறவாதீர்கள்." "உன்னைப் படைத்தரை உன் இளமைப் பருவத்தில் மறவாதே. வாழ்க்கை எனக்கு இன்பம் தரவில்லையே என்று நீ சொல்லக்கூடிய துயர நாள்களும் ஆண்டுகளும் வருமுன் அவரை உள்ளத்திலே நினை"

இளமைப்பருவம் சூரியனைக் கண்ட பனி போல் நாம் கண்மூடி திறப்பதற்குள் மறைந்து விடும். வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் உனக்கு கடவுள் கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷம். இன்பத்தில் மூழ்கி தவிக்காதே. செல்வ செழிப்பில் மயங்கி விழிக்காதே. இளமை நிரந்தரமானதல்ல. உடலும் நிலையானதல்ல. ஆகவே உன் இளமைப் பருவம் எப்படிபட்டது? சிந்தித்துப் பார்.

# கவிதைக் களம்

### புது வாழ்வு உயிர்க்காதோ?

புது வாழ்வு உயிர்க்காதோ- எமக்கு
புது வசந்தம் வீசாதோ- என்றும் எம்
ஏழைகள் இதயம் குளிராதோ- நாதா
நாம் ஏங்கியே தவிக்கின்றோம் - இங்கு
விரியாத மொட்டுக்களாய்
வாய் பேசா ஊமைகளாய்
பணிபுரியும் அடிமைகளாய்
வாழும் எம் மக்களின்- புது
வாழ்வு மலராதோ- உன் உயிர்ப்பால்
வாழ்வு சிறக்காதோ?

நிலோஜா, தாழ்வுபாடு, மன்னார்.

### அன்பு

அன்பு என்ற முன்றெழுத்தால் -இந்த
அகிலமே வாழுதம்மா!
உள்ளங்கள் இணைந்திட
அன்பொன்றே வேண்டும்மா!
உலகை பொங்கவே அன்பு வேண்டுமே!
இளைஞர் சமுதாயம்
ஏற்றமிகு வாழ்வு பெற
ஏணியாய் இருப்பதும்
அன்பு ஒன்றே!
அன்பினை ஆடையாய் அணிந்துமே
நாளைய உலகை
நலமுடனே கட்டுவோம்.

ம. ஆன் ஜீவறாணி, மடுக் கோவில்

### மனுவுருவின் மகத்துவம்

அலையைத் தேடி கடல் வருவதில்லை
எறும்பைத் தேடி கரும்பு வருவதில்லை
தேனீயைத் தேடி தேன் வருவதில்லை
வண்டைத் தேடி
வண்ண மலர்கள் வருவதில்லை
ஒளியைத் தேடி இருள் வருவதில்லை
ஆனால் மனிதனைத் தேடி
தெய்வம் வந்தது
எதற்காக மனிதரை தெய்வமாக்க!

செ. புனித ராணி,
133.5, சிதம்பரபுரம், வவுனியா.



### உன்னை அறிந்திட

நான் அழுகின்ற போதுதான் - உன்
அரவணைப்பை உணர்கின்றேன்
துயரில் துவழ்கின்ற போதுதான் - உன்
அன்பை சுவைக்கின்றேன்.

தோல்வியில் வீழ்கின்ற போதுதான் - நீ
தரும் செய்தியைப் படிக்கிறேன்.
கால்கள் கடுக்கின்ற போதுதான் - நீ
தாங்கி நிற்பதை அறிகின்றேன்

நிழலை அறிந்திட கோடை தேவை
பொன்னை அறிந்திட புடமிடல் தேவை
உன்னை அறிந்திட துயர் தேவை
இறைவா உன்னையே
உயிராய் நேசிக்கின்றேன்
நாழும் உன் வழி
செல்ல ஆசிக்கின்றேன்.
எனவே என் வாழ்வில்
சிலுவைகளை நேசிக்கின்றேன்.

மலாக்கியாஸ் சுபாசினி,
8ஆம் வட்டாரம், பேசாலை.



### ஒற்றுமை

ஒற்றுமையே வாழ்வின் உயர்குலம் - அதை
ஓங்கியே உயர்த்திடுவாய் மனிதா
ஒற்றுமையே வாழ்வின் ஒளி விளக்கு -அதை
ஒளிரச் செய்வாய் மனிதா!

பகைமையே வாழ்வின் தடைக்கல் - அதைப்
பிடுங்கியே எறிவாய் மனிதா
அன்பே வாழ்வின் அடித்தளம் - அதை
மனத்தில் விதைப்பாய் மனிதா!

ஆணவம் என்ற பேயை - நீ
அடியோடு அழித்திடு மனிதா
அன்பிய வாழ்வு மலர்ந்திட -நீ
அல்லும் பகலும் உழைத்திடு!

உன் அயலானை - நீ
அன்பு செய்து வாழ் மனிதா - அங்கு
அமைதி சமாதானம் ஒற்றுமை சமூகம்
உருவாகும் மனிதா!

ம. றொகானி
வழிபாட்டுக்குழு, முருங்கன் பங்கு.

# வாசகர் எண்ணங்கள்



### ஆவலாய் கரத்தில் எடுக்கிறேன்!

அன்பான மன்னாவை
ஆவலாய் கரத்தில் எடுக்கிறேன்.
இதயத்தின் தாகம் தீர
ஈன்றாய் நல்ல செய்திகளை!
உரமாய் விதைக்கின்றாய்
ஊரெல்லாம் உன் புகழை
எடுத்தியம்பும் வண்ணம்
ஏழைகட்கும் ஆறுதலாய் - நல்
ஒற்றுமையின் சிகரமாய்
ஓங்குக உன்பணி பாரினில்
ஔதடமாய் பயன்பட ஆசிக்கின்றேன்.

சி. எஸ். எஸ். குருஸ்
கோயில் வீதி, உயிலங்குளம்

### படிக்க சுவைக்க ஓர் நல்ல பத்திரிகை!

சிறியோர் முதல் பெரியோர் வரை
விரும்பி படிக்க சுவைக்க
ஓர் நல்ல பத்திரிகை மன்னா.
பங்குச்செய்திகள், பல்சுவை அம்சங்கள்,
நகைச்சுவை துணுக்குகள்,
பெரியப்பா பதில்கள் அத்தனையும் தேன்.
மன்னாவின் பணி மகத்தான பணி.
மேலும் மேலும் தொடர வாழ்த்துக்கள்.

கே. பிலேந்திரன்,
கார்மேல் நகர், எஸ்.பி.பொற்கேணி.

### கை குலுக்கி வாழ்த்துக்கள!

இறைவாக்கினரும் பதிப்பாசிரியருமாகிய
தங்களுக்கு இறையாசீரும்
நல்வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்
அளித்து நிற்கிறேன்.
"ஒய்யாரமாக அமர்ந்து .....கைகட்டி
வாய் பொத்தி .....வெளியே வேடிக்கை
பார்த்து...... தங்க நகையும் நாகரீக
உடையும்....." என்ற வரிகள் எனக்குப்
பிடித்துக்கொண்டது. இறைவாக்கினர்
அவ்வப்போது நலமெனக் காண்பவற்றை
சுட்டிக்காட்டுபவர். அந்த வகையில்
மேலும் அளவற்ற பயன்தரு
பணிகளுக்கு கை குலுக்கி
வாழ்த்துக்கள். தங்கள் முயற்சிகள்
வளர்ச்சியடைய அன்பும் செபமும்
நிறைந்த வாழ்த்துக்கள்.

சகோதரி மேரி பொஸ்கோ,
பேசாலை

### என்னை ஏமாந்தி விடாதே!

என் அன்பின் மன்னாவே!
என் உள்ளத்திற்கு மகிழ்ச்சி தரும் மன்னாவே
உன்னை நினைக்காத நாள் இல்லை.
உன் பக்கங்களை படிக்காத நேரமில்லை.
வானில் சூரியன் உதிக்க மறந்தாலும்
நான் உன்னை மறக்க நினைப்பதில்லை.
ஏன் என்றால் உனது அனைத்து
ஆக்கங்களும் அருமை.
அதைவிட வாசகர் எண்ணங்கள் என்ற
பெயரில் அனுப்பும் அனைத்து அம்சங்களும்
அருமை. மன்னா நீ என்றும் வாழ்க!
வளமுடன் உன் சேவை ஓங்குக.
மன்னா உன்னை எதிர்பார்த்திருக்கும்
என்னை ஏமாற்றி விடாதே.
நிச்சயம் எனது கருத்தை சுமந்து வருவாய்
என எதிர்பார்த்திருப்பேன்.
வாழ்க மன்னா! வளர்க சேவை!

...ப்படி, தலைமன்னார்.

### உலகெங்கும் தென்றலாய் பரவிடு!

மன்னாவே நீ
வளமோடு வாழ்க
மாந்தர் எம் உள்ளத்தில்
மலர்ந்து மணம் கமழ்க!

உலகெங்கும் நீ
உண்மையை உரைத்திடு!
உறவின் பாலங்களை
உரிமையுடன் நீ கட்டு!

மன்னாவே உனது பெயர்
உலகெங்கும் தென்றலாய் பரவட்டும்!
உலகிற்கு மன்னாவின் மூலம்
சமாதானம் பரவட்டும்!

மன்னாவே உன் வாழ்க்கை
பயணத்தை தொடர்ந்திடு!
வண்ண மலர் போல் மலர்ந்து
எம் உள்ளத்தை உன் அன்பால்
மகிழ்வித்திடு!
மன்னாவே நீ வாழ்க!

ல டினீசியா (டிலா)
சின்னப் பண்டிவிரிச்சான்
மடுக்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

## தேர்தல் வருது.... தேர்தல் வருது....

மீண்டும் ஒரு தேர்தல் திருவிழா. ஏறக்குறைய மூன்று மாதகால அரசியல் தகிடு தத்தங்களுக்குப் பிறகு நாட்டில் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல். ஜனநாயக வரம்பு மீறல்களுக்கு மத்தியில் மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உயிர் பிழைப்பதற்கான போராட்டமும் ஓட்டை விழுந்து பலூன் போலாகி விட்டது!

யானை வருவதற்கு முன்வரும் மணியோசைபோல வழமையாக தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளே முதன்மை பெறுவதுண்டு. ஆனால் இம்முறை புதியதொரு தேர்தல் அலை மிகுந்த உத்வேகத்தோடு வீசுகின்றது. இப்புதிய அலை ஏற்கெனவே இந்திய அரசியலில் பிரபலமானதுதான் என்றாலும் இலங்கையைப் பொறுத்த மட்டில் கடந்த சில தேர்தல்களில் மெதுவாகத் துளிர்விட்டிருந்த இது இம்முறை மிகவும் வேகத்தோடு பேசப்பட்டு வருகிறது. அதுதான் தேர்தலுக்கான சிறுபான்மைக் கட்சிகளின் அரசியற் கூட்டணி.

இருபத்தி மூன்று வருடங்களுக்கு முன்னர் அதாவது 1977 ஜூலையில் நடைபெற்ற 8ஆவது பாராளுமன்ற தேர்தல்களில் ஒரு குடையின் கீழ் போட்டியிட்ட தமிழ்க் கட்சிகள் 23 வருடங்கள் கடந்த பின்னர் முற்றும் முழுதாக இல்லாவிட்டாலும் நான்கு தமிழ் கட்சிகள் ஒருமித்து போட்டியிட முன்வந்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி என்பனவே உதயசூரியன் சின்னத்தில் வடக்கு கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் போட்டியிட நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளன. ஈ.பி.டி.பி. உள்ளிட்ட அனைத்து தமிழ் கட்சிகளும் பொது உடன்பாட்டிற்கு எதிர்காலத்திலாவது வருவது மிகமிக அவசியமான காலத்தின் தேவையாகும். பேரினவாதிகளை திருப்திப்படுத்தும் அரசியல் அல்லது அவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ துணை போகும் நடவடிக்கைகள் தமிழர்களை பலவீனப்படுத்தவே செய்யும்.

இந்த தேர்தலில் நான்கு கட்சிகளாவது இணைந்திருப்பது பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். தனித்தனியாகப் போட்டியிடுவதன் மூலம் பலவீனப்படுவது தமிழ் பிரதிநிதித்துவமே தவிர வேறு ஒன்றும் அல்ல. எதிர்வரும் பாராளுமன்ற பொதுத்தேர்தல் பதவிகளை மையமாக கொள்ளாது தமிழ் தேசியத்தை வலியுறுத்தவதாக - வெளிப்படுத்துவதாக தமிழ் மக்களுக்கு பயன்படவேண்டும். தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் கட்சி பேதமின்றி தான் சார்ந்த கட்சி அதற்கு தடையாக இருந்தால் அதனையும் கடந்து செயற்பட வேண்டும். மக்கள் வாக்களிக்கும் விடயத்தில் அசட்டையாக இருக்காது தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும். தேர்தல் முறைகேடுகள் மட்டில் அவதானமாக இருந்து அணிதிரண்டு குரல்கொடுக்க வேண்டும்.




## இரத்தினபுரி ஆயர்...

முதலாம் பக்கத் தொடர்ச்சி

1983ல் மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனராக நியமிக்கப்பட்ட இவர், திறமையாக தனது பணிகளை மேற்கொண்டார். இலங்கைத் திருப்பாலத்துவ சபை அமைப்பை சிறப்பாக கட்டி எழுப்பினார். 1991ல் கொழும்பு துணை ஆயராக நியமிக்கப்பட்டார். 1995ல் திருத்தந்தையின் இலங்கை வருகைக்கு பொறுப்பாக இருந்த இவர் அனைவரும் மெச்சும் அளவுக்கு திருத்தந்தையின் வருகையை சிறப்பாக ஒழுங்கமைத்தார். 1996ல் இரத்தினபுரி ஆயராக பொறுப்பேற்றார். இவர் இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு தனது பங்களிப்பை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. சிறந்த அறிஞராகவும் மறையுரையாளராகவும் விளங்கும் இவர் தனது புதிய பொறுப்புகளைத் திறம்பட செய்து இலங்கைக்கு மேலும் பெருமை சேர்ப்பார் என எதிர்பார்க்கலாம். மல்கம் ஆண்டகைக்கு மன்னார் திருச்சபையின் பெயரால் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**பிந்திக் கிடைத்த செய்தி :** திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் மல்கம் ஆண்டகை கொழும்பு நவலோகா வைத்தியசாலையில் அவசர சத்திர சிகிச்சைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய உடல் நலத்திற்காக செபிக்கும்படி இறைமக்கள் அழைக்கப்படுகின்றனர்.

## மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய......10ம் பக்கத்தொடர்ச்சி

இந்நிகழ்வின்போது அருட்பணி வின்னி அடிகளார் இளைஞர்களுக்கு சிறப்புரை வழங்கினார். அவர் மனிதத்தன்மை பற்றியும் இறையரசு பற்றியும் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். அதில் அவர் மனிதனாகப் படைக்கப்பட்ட நாம் மனிதத்தன்மையுடன் வாழ வேண்டுமெனவும் அப்போதுதான் மனித வாழ்க்கை பயனுள்ளதாக அமையும் என்றும் பார்ப்பதற்கு நாம் மனிதர்களாக மட்டும் இருந்தால் போதாது மனிதத்தன்மையுள்ளவர்களாக மாறவேண்டுமெனவும் கிறிஸ்தவர்களாக வாழும் நாம் கிறிஸ்தவ விழுமியங்களை பண்புகளை ஏற்று நடக்க வேண்டுமென்றும் கூறினார்.

புரட்டாதி மாதத்திற்கான செயற்குழுக்கூட்டம் மன்னார் புனித வளன் திருமறைப்பணி நிலையத்தில் இடம்பெற்றது. . தகவல் : பத்திராபதிபர் அலக்ஸ் பெணான்டோ

# பெரியப்பா பதில்கள்



✱ நீங்கள் பாப்பரசரானால் என்ன செய்வீர்கள்?

யோ. அமிர்த நாதன்
முருங்கன் கமம், முருங்கன்
உடனடித் திட்டம் 2

பெண்கள் குருக்களாக வர அனுமதி அளிப்பேன்! குருக்களுக்கான மணத் துறவை விலக்கி விடுவேன்! நானாவது பாப்பரசரா வாறதாவது. ...... வயதான சிஸ்ரர்மாரும் சுவாமிமாரும் என்னை ஓட ஓட விரட்டுறாங்க..... அய்யோ ..என்ன காப்பாற்றுங்க ...!.

யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.....ஹி ..ஹி ....ஹி...

✱ ஒரு பெண்ணின் மனதை புரிந்து கொள்ள என்ன வழி?

எம். ஸ்ரீபன்
93, முதலியார் குளம், செட்டி குளம்

ஆறு அது ஆழம் இல்ல சேரும் கடல் ஆழம் இல்ல ஆழம் ஏது அய்யா அந்த பொம்பிள மனசு தாய்யா!

ஆழமான பெண்ணின் மனதை அறிய - புரிய நாமும் ஆழமாகச் செல்ல வேண்டும். அதுதான் ... ஆழமாக அன்பு செய்ய வேண்டும் என்கிறேன்.

✱ சமயம் என்பது ஒரு கற்பனை என்று வாதிடுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மு. அன்ரனிற்றா கற்கிடந்த குளம், முருங்ன்.

சமயத்தை ஏற்றுக்கொள்கின்றவர்களுக்கு எவ்வித விளக்கமும் தேவையில்லை.
சமயத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும் எவ்வித விளக்கமும் தேவையில்லை.

✱ ஒவ்வொரு துறையிலும் தங்களுக்குப் பிடித்த மாணவர்களைக் கூறுங்களேன்?

ம. மகேந்திரன், நானாட்டான்

அய்யய்யோ... அவங்கல்லாம் செத்துப் போயிட்டாங்க மகேந்திரன்!

✱ கத்தோலிக்கக் குருமார்கள் திருமணம் செய்யக்கூடாது என்ற கத்தோலிக்க மத சட்டம் நியாயமானதா?

பீற்றர், பறப்பாங்கண்டல்.

ஓகோ அத்கேக்கிறங்களா....அது பெரிய விசயம். நான் சொல்லக் கூடாது. புனித சின்னப்பரே, கொஞ்சம் உதவிக்கு வாங்களேன்...

"....மணமாகாதவன் ஆண்டவர்க்குரியதில் கவலையாயிருக்கிறான். அவரை எவ்வாறு மகிழ்விக்கலாம் என்ற நினைவாகவே இருக்கிறான். மணமானவனோ உலகத்துக் காரியத்தில் கவலையாய் இருக்கிறான். மனைவியை எவ்வாறு மகிழ்விக்கலாம் என்ற நினைவாகவே இருக்கிறான்... (1கொரிந்தியர் 7-32,33). இப்ப புரிஞ்சுதா ?

✱ ஓட்டப் பந்தயத்தில் ஓடி வெற்றி பெற லட்சியம் கொண்டவனுக்கு திடீரென கால் முறிந்து விட்டால்...

விமல சேகரன். கண்டி

சோம்பிவிடமாட்டான். ஊனமுற்றவர்களுக்காக எத்தனையோ போட்டிகள் நடக்கின்றனவே. இலட்சியவாதிகள் தோற்பதில்லை!

✱ சோகப்பாடல்களில் ஏன் நிலவு பற்றி எழுதுகிறார்கள்?

கி. கண்ணன், வவுனியா

சோகத்தில் இரவில் தூக்கம் வராது. சரியென்று வெளியே போனால் யாரைப் பார்க்கவும் பிடிக்காது. வேறு வழியில்லாமல் அண்ணார்ந்து பார்த்தால் உருப்படியாக கண்ணுக்கு தெரிவது பாவம் நிலவு ஒன்றே. வகையாக அது கவிஞர்களிடம் மாட்டிக்கொண்டு விட்டது.

வெறுத்துப்போய் அமவாசை அன்று நிலவு லீவு எடுத்துக்கொள்வதுகூட சில கவிஞர்களால்தான்.

✱ இயேசு இப்போது வாழ்ந்தால் திருச்சபையில் என்ன பதவி வகிப்பார்?

செ. வசந்த றாணி, முள்ளிய வளை

ஆனாலும் நீங்கள் மிச்சம் மோசம்! இக்காலத்தில் யேசுவுக்குக்கூட பதவி ஆசை வந்து விடும் என்கிறீர்களா? அவர் அரசியல் வாதியல்ல. சொன்ன சொல் மாறமாட்டார். இன்றைய கிறிஸ்தவத்தை அர்த்தமற்றதாக்கும் நச்சுக் காரணங்களில் பதவி மோகமும் ஒன்று. "உங்களுக்குள் எவன் பெரியவனாயிருக்க விரும்புகிறானோ அவன் உங்கள் பணியாளனாய் இருக்கட்டும்" (மாற் 10: 43)

✱ கிறிஸ்துமஸ் 'மன்னா' எப்படி வரப்போகிறது?

நெல்சன், வவுனியா

தபாலில் !

✱ நம்மவர்களில் பலர் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழாமல் வெளி உலக ஆசாபாசத்தால் நிறைந்திருக்கிறார்களே ஏன்?

தேன் மொழி, அடம்பன்

கம்பியில் நடக்க வேண்டும் குட்டிக் கரணம் போட வேண்டும் என்று அழுத்தமாக ஆவேஷமாகச் சொல்லி விடுவதால் மட்டும் ஒரு சர்க்கஸ் வீரனை உருவாக்க முடியுமா? பயிற்சியாளர் கம்பியில் நடந்து காட்ட வேண்டும். குட்டிக் கரணம் போட வேண்டும். அணு அணுவாக அவனைப் பயிற்றுவிக்க வேண்டும். உண்மைக் கிறிஸ்தவனை உருவாக்க பிரசங்கங்களே போதும் என்ற மூடநம்பிக்கை உடைபடாதவரை ஆசாபாசக் கிறிஸ்தவர்களே உற்பத்தியாவார்கள் !

✱ இன்றைய அரசியல் வாதிகளின் தீராத ஆசை எது?

க. மோகன், கொழும்பு

நாற்காலி !

## அன்னை திரேசாவும் சாத்தானும் ....10ம் பக்கத் தொடர்ச்சி

நித்திரையில் அன்னை திரேசா துன்பப்பட்டதற்கு வைத்திய ரீதியாக எந்தக் காரணத்தையும் குறிப்பிட முடியாது என்று வைத்தியர்கள் கூறியதை அடுத்து தானும் இன்னுமோர் குருவும் சாத்தானைக் கட்டுப்படுத்தும் செபத்தை மந்திரித்ததாக ஆயர் குறிப்பிட்டார். மேலும் ஆயர், அன்னை திரேசா சாத்தானால் பீடிக்கப்படவில்லை ஆனால் மற்றைய புனிதர்களுக்கு நேர்ந்ததுபோல் சாத்தானின் தொல்லைகளுக்கு அன்னை திரேசாளும் ஆளாகியிருக்கிறார் என்று குறிப்பிட்டிருக்கிறார். இதற்கிடையில் கல்கத்தா மறைமாநிலத்தில் அன்னைத் திரேசாள் பற்றி 50,000 பக்கங்கள் கொண்ட தகவல் பத்திரத்தைத் தயாரித்துள்ளனர். அன்னை திரேசாளை புனிதையாக பிரகடனப்படுத்தும் அடுத்த கட்ட நடவடிக்கை நிறைவடைய இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் போகலாம் என அதற்குப் பொறுப்பான அருட்தந்தை பிறாயன் கொலோடியெசிக் தெரிவித்திருக்கிறார்.

## மன்னார் குருமுதல்வர் --1ம் பக்கத்தொடர்ச்சி

பல்லாண்டுகளுக்கு முன் ஒன்றாக பயின்ற இவர்கள் சந்தித்து தமது பணிகளைப்பற்றி கலந்துரையாடினர். அத்துடன் திருத்தந்தையை நேரில் சந்தித்து அவருடைய ஆசியையும் பெற்றுக்கொண்டனர். இறுதி நாளில் இவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். "40 ஆண்டுகளுக்கு முன்பு நாம் ஒன்றாகப் பயின்ற சர்வகலாசாலையில் மீண்டும் ஒன்றுகூடுவது பெருமகிழ்ச்சியை தருகிறது, இதற்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்" என ஜேர்மனில் இருந்து வெளிவரும் தொடுவானம் என்ற கத்தோலிக்க பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம்செய்து புலம்பெயர்ந்த தமிழ் மக்களையும் இந்நாடுகளில் ஆன்மீகப்பணி புரியும் அருட்பணியாளர்களையும் சந்தித்தாக அப்பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

## அன்பின் கலாச்சாரத்தை......10ம் ப்க்கத் தொடர்ச்சி

அமெரிக்காவில் நடத்தப்பட்ட கொடுமை உலகில் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்ற செயல்களுக்கு நம்மை இட்டுச் செல்லக் கூடாது என்று கூறிய திருத்தந்தை மேலும் கூறுகையில் இஸ்லாமிய மதத்துக்கு கத்தோலிக்க திருச்சபை பெரும் மதிப்பளிக்கிறது என்றும் பேதங்களுக்கோ வன்முறைகளுக்கோ வெறுப்புக்களுக்கோ இடமளிக்காது சகல மதத்தவரும் உலக சமாதானத்துக்காக ஒன்றுபட வேண்டுமெனவும் தந்தையான ஒரே கடவுள் தந்த அழகான இவ்வுலகத்தில் வன்முறைக் கலாச்சாரத்தை அன்று அன்பின் கலாச்சாரத்தையே உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஆப்கானிஸ்தான் எல்லையோரம் அமைந்துள்ள தஜிகிஸ்தானில் திருத்தந்தையின் விஜயம் முடியும்வரை ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று அமெரிக்க நிர்வாகம் உறுதியளித்திருந்தது. தனது மக்களை கெரில்லாக்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக் கொண்டாலும் வன்முறைகளற்ற முறைகளே சிறந்தது என்று வத்திக்கான் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் ஆயரைப் பாராட்டும்..1ம் பக்கத் தொடர்ச்சி

இலங்கை நாடு இழந்து தவிக்கும் சமாதானத்தை மீண்டும் பெற்று மகிழ தாங்கள் ஆற்றும் பணி முழு உலகமும் அறியும். இருப்பினும், யுத்தத்தை சாட்டாக வைத்து ஆங்காங்கே புரியப்படுகின்ற அநீதிகள், அடிப்படை உரிமை மீறல்கள், பாலியல் வல்லுறவுகள் போன்றவை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டப்படுவது மிக மிகக் குறைவு. கடந்த சித்திரையில் நடந்தேறிய பொது நிலையினர் மகா நாட்டில் கலந்து கொள்ள மன்னாரில் இருந்து வந்திருந்த பொதுநிலையினர் வாயிலாக தங்களது துணிகரமான செயற்பாடுகள் பற்றி அறிந்தோம். இரண்டு பெண்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக்காப்பவர்களினால் பாலியல் வல்லுறவிற்கு உள்ளான சம்பவம் தொடர்பாக தாங்கள் எடுத்த துணிச்சல் மிக்க நடவடிக்கைகள் பற்றி எமது மறைமாவட்ட பொது நிலையினருக்கும் ஏனையோருக்கும் அவர்கள் அறியத் தந்திருந்தனர். இவ்விடயம் தொடர்பாக தாங்கள் பலவித அச்சுறுத்தல்களுக்கும் ஆளானதாகவும் எம்மால் அறிய முடிந்தது. தங்கள் துணிச்சல் மிக்க நடவடிக்கைக்காக எங்கள் பாராட்டுதல்கள். நீதிக்கும சமாதானத்திற்குமான தங்கள் பணி தொடர நல் வாழ்த்துக்கள் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திருத்தம்

புரட்டாதி மாத மன்னாவில் "ஆயிரக்கணக்கான தமிழர்கள் மரணத்தின் வாயிலை அடையும்வரை சித்திரவதை செய்யப்படுகின்றார்கள" என்ற செய்தியில் "சுவிற்சிலாந்தின் சித்திரவதைகளுக்கு எதிரான கத்தோலிக்க ஒன்றியத்தினால்" Association of Catholics Against Torture (ACAT) என்ற சொற்பதம் தவறதலாக "சுவிற்சிலாந்தின் பயங்கரவாதத்திற்கு எதிரான கத்தோலிக்க ஒன்றியத்தினால்" Association of Catholics Against Terrorism (ACAT) எனப் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதை அறியத்தருகிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருக்குடும்ப சபையின் யாழ் மாகாணத் தலைவி அருட் செல்வி அன்சிலாவுடன்

# நேர்காணல்

6ம் பக்கத் தொடர்ச்சி

**5. துறவிகள் தமது பணியை ஆழமாக அர்த்தமுள்ள விதத்தில் செய்வதற்கு மக்கள் எவ்விதம் அவர்களோடு ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்க்கிறீர்கள்?**

கிறிஸ்து துறவிகளை மட்டுமல்ல அனைத்து மக்களையும் சீடத்துவத்திற்கு அழைத்துள்ளார். மக்கள் இந்தச் சீடத்துவத்தையும், பணியையும் விளங்கிக் கொள்ள வேண்டும். சகோதரிகளின் வழிநடத்தும் பணியில் தோளோடு தோள் நின்று, பங்கேற்கும் திருச்சபையாகத் தமது பங்களிப்பை நிறைவாக நல்க வேண்டும். இதில் எமது தி.கு. பொதுநிலை அங்கத்தவர்களின் பணியைச் சிறப்பாகக் கூறவேண்டும். அவர்கள் தமது குடும்பச் சுமைகளையும். பொருட்படுத்தாது எவ்வேளையிலும், எந்த இடத்திலும் முன்னின்று பணியாற்றுவது பாராட்டுக்குரிய தொன்று. எனவே இது துறவிகளுக்குரிய பணி என்று பிரித்து வைக்காது, அவர்களை அன்னியப்படுத்தாது, அவர்களுடன் ஒன்றித்து, தமது ஆலோசனைகளை வழங்கி ஒருவர் ஒருவரின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

**6, மன்னார் மறைமாவட்டத்தில் தி. கு. சகோதரிகளின் பணிபற்றி திருப்தியடைகிறீர்களா?**

எவரும் எதிலும் பூரண திருப்தியடைய முடியாது. திருப்தியடையவும் கூடாது. அது வளர்ச்சியை தேக்க நிலைக்குத் தள்ளிவிடும். குறிப்பாகப் பணியில் என்றுமே திருப்தியடைய முடியாது. தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க சேவைகளும் அதிகமாக வேண்டப்படுகின்றன. அதிலும் விசேடமாக மன்னார் மறைமாவட்டம் வளர்ச்சியடைந்துகொண்டு வரும் ஒரு மறைமாவட்டம். மிகத்துரிதமாக வளர்ச்சியடைந்து கொண்டு வருவதைக் காணும்போது மகிழ்ச்சியாயுள்ளது. எனவே வளர்ச்சியின் உயர்ச்சிக்கேற்பத் தேவைகளும் அதிகரித்துள்ளன. எல்லா இடங்களிலிருந்தும் சகோதரிகளைத் தந்துதவுங்கள் எனும் கோரிக்கை வந்தவண்ணமேயுள்ளன. அதேவேளை எமது மாகாணத்தின் வயதெல்லை கூடிக் கொண்டு வருகின்றது. அந்த விகிதாசாரத்திற்கேற்ப அழைத்தல்கள் அதிகரிப்பது குறைவு. இடைப்பட்ட காலங்களில் மறைபோதகப் பணிக்காகச் சகோதரிகள் வெளிநாட்டுக்குச் சென்றுள்ளனர். அழைத்தல்களும் குறைவாக இருந்துள்ளது. இதனால் சகோதரிகளைப் பகிர்ந்தளிப்பதில் கஷ்டத்தை எதிர்கொள்கின்றோம். இந்நிலையில் எமக்குரிய அழைத்தல்களைத் தந்துதவுவது பங்குத்தந்தையரினதும் பெற்றோரினதும் கட்டாயக் கடமை. இருந்தும் இங்குள்ள எமது சகோதரிகள் எந்த விதமான இடர்பாடுகள் மத்தியிலும் உயிரைப் பணயம் வைத்துக் கூடப் பணியாற்றுவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

**7, உங்களது சபைக்குக்கிடைக்கும் அழைத்தல்கள் பற்றி....?**

எமது சபைக்கு மட்டுமல்ல பொதுவாகவே திருச்சபைப் பணியாளருக்கான அழைத்தல்கள் இன்றைய காலகட்டத்தில் குறைவாகவேயுள்ளன. அன்றியும் நாம் எமது சபைக்கான அழைத்தல் என்று மட்டும் செயற்படுவதில்லை. எனவே அதற்கான விளம்பரங்கள் செய்வதோ, கருத்தரங்குகள் நடத்துவதோ, அழைத்தல் பொருட்காட்சிகள் வைப்பதோ குறைவு என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம். இருந்தும் எமது சபை தனியே அப்போஸ்தலிக்கப் பணியாற்றும் துறவிகளை மட்டும் கொண்டதல்ல, தியான யோக சகோதரிகள், திருமடச் சார்பற்றோர், துணை அங்கத்தவர்களான ஆண்கள், பெண்கள், இளைஞர், சிறுவரையும் துறவற சபைகளைச் சாராத குருக்களையும் உள்ளடக்கிய ஒரு பாரிய குடும்பம். இதில் அனைவருக்கும் இடமுண்டு என்பதைக் காலத்திற்கும் நேரத்திற்குமேற்ப சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் வலியுறுத்தி வருகின்றோம். அவ்வாறே நாம் முன்னர் கூறியது போன்று எமது சபைக்கான அழைத்தல் என்ற குறுகிய வட்டத்துள் மட்டும் நாம் நில்லாது, எமது பாடசாலைகள், விடுதிச்சாலைகளில், அழைத்தல் தேடிவரும் எந்தச் சபையினரையும் வரவேற்று அவர்களை மாணவிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம்.

**8, இறுதியாக இத்துடன் தொடர்பில்லாத ஒருவினா, மன்னாபற்றி உங்கள் கருத்து யாது?. நீங்கள் வழங்கும் செய்தி யாது?**

மன்னா சிறப்பாக வளர்ச்சி கண்டுள்ளது, வாசிக்க வாசிக்கத் தெவிட்டாத தெள்ளமுது மன்னா. இதன் பதிப்பாசிரியரின் திறமையை சிந்தனை விரிவாக்கத்தையும் பரந்த கண்ணோட்டத்தையும், கடமையுணர்வையும் பாராட்டுகிறோம். குறைந்த காலத்தில் நிறைந்த வளர்ச்சி கண்டுள்ளது. வாசகர் வட்டம் அதிகரித்துள்ளது. தேக்க நிலைக்கு முகம் கொடாது, தரத்தில் குறையாது பரந்த நோக்கைக் கைநெகிழ விடாது மாத இதழ் வார இதழாக மலர வாழ்த்துகின்றோம்.

இந்த மன்னா மலரில் எங்களையும் இணைப்பதற்கு மிக்க நன்றிகள்.

# நீத்தார் நினைவுகள்

### 3ஆம் ஆண்டு நினைவு



செல்வி சூசை கிருபாநிதி
(கவிதா)
மாதா கிராமம், முருங்கன்

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 7.09.1981 | 16.11.1998 |

இயேசுவே! இறந்து போன லாசருக்காகக் கண்ணீர் சிந்தினீரே! எங்கள் கண்ணீரையும் துடைக்க கிருபை கூர்ந்தருளும். கருணை தேவனே! உமது அன்புக் கொடையாக நீர் எமக்களித்த கிருபாநிதி (கவிதா) என்னும் உமது அடியாளை உம் சித்தப்படி மீண்டும் விண்ணவர் கூட்டத்தில் இணைப்பதற்கு அழைத்துக் கொண்டீரே! அவருடைய ஆன்மாவை அமைதியும் ஒளியும் நிறைந்த இடத்தில் வரவேற்று உமது இன்ப வான் வீட்டில் சேர்த்தருளும். சமாதானத்தில் இளைப்பாற அருள் புரிந்தருளும்.

இவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக 16.11.2001 அன்று பெரிய குஞ்சுக் குளம் புனித மரியன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் பலியில் பங்குபற்றி செபிக்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், அன்பு அக்கா, ஆசைத்தம்பி, அன்ரி, மற்றும் உறவினர்கள்.

### 8ஆம் ஆண்டு நினைவு



திமிங்குப்பிள்ளை
மனுவேற்பிள்ளை
கங்காணதீவு, நானாட்டான்


| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 10. 04. 1909 | 27. 10. 1993 |

அன்பாய் அணைத் தெம்மை
ஆதரவாய் வளர்த்தெடுத்து
விண்போல் உயர்த்தி விட்டு
வேதனையில் நாம் தவிக்க
மண்ணுலகை விட்டு
எட்டு ஆண்டுகள் சென்றிடினும்
உம் நினைவுகள் எம் நெஞ்சில்
நிறைந்துள்ளன.

இவரின் ஆன்ம சாந்திக்காக 27. 10. 2001 அன்று சனிக்கிழமை காலையில் சிலாபம் புனித பொனதேத் அம்மாள் ஆலயத்திலும் இரத்தினபுரி தெகியோவிற்ற புனித அந்தோனியார் ஆலயத்திலும் அமெரிக்கா கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்திலும் நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும் பிரான்ஸ் பாரீஸ் சிற்றாலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இவரின் பிரிவால் துயருறும், அன்புப் பிள்ளைகள் மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

### 4ஆம் ஆண்டு நினைவு



பே. மரியாம்பிள்ளை
பனங்கட்டுக்கொட்டு,
மன்னார்

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 14.04. 1910 | 06.10.1997 |

பதினாறும் பெற்று
பெருவாழ்வு வாழ்ந்து
பாரினில் முகமலர்வோடு
இன்சொல் புனைந்து
இகமதில் பல வருடம் வாழ்ந்து
ஒரு நொடிப்பொழுதில் எம்மைப்
பிரிந்து இறைவனடி சென்றீரே
ஐயா!
ஆண்டுகள் பல சென்றாலும்
உம் அன்பு முகம்
எம்மை விட்டு அகலாதையா!
உமது வார்த்தை ஒவ்வொன்றும்
எம் உள்ளத்தில் லயமாய்
அலை பாயுதையா!
எம்மை ஆறாத் துயரத்தில்
மூழ்கச் செய்து நீர்
மீளாத் துயில் கொண்டது
ஏனையா?

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 06. 10. 2001 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மைத்துனர்,
பூட்டப்பிள்ளைகள்.

# மன்னா பணியகச் செய்திகள்

## இந்த உரையாடலைக் கொஞ்சம் கேளுங்கள்

விதுனா:- என்னடி மிதுனா! மன்னா மன்னா என்று வீட்டு வாசலுக்க ஒரே ஆக்கள். கிடக்கிற வேலைக்க..... தினமுரசு, முரசொலி, இடி, விரகேசரிப் பத்திரிகை கையிலிருக்க.... இன்னும் காசு பணம் இல்லாத நேரத்தில பெரிய எரிச்சல்தான் வருது.....!

மிதுனா:- அப்படிச் சொல்லாதே விதுனா. உங்க வீட்டில சாப்பாட்டிற்கு, உடைக்கு, படிப்புக்கு, படத்துக்கு, மருந்துக்கு, பயணத்துக்கு, பொழுது போக்கிற்கு, நாளாந்தம் எவ்வளவு பணத்தைச் செலவளிக்கிறாய்? மாதத்தில் ஒன்று தானே மன்னா. நாளுக்குச் சராசரி 3சதம் தானே! மாதம் 10 ரூபா இறைவன் தரும் செய்தியை அறிய என்ன கஷ்டப்படுகிறாய்?

விதுனா:- உன்ர நியாயம் சரியென்று படுகிறது மிதுனா. என்னைச் சிந்திக்க வைத்துவிட்டாய். என்ர மனசைத் தொட்டுவிட்டாய் என்னை உறுதியாய் மாற்றிவிட்டாயே.

மிதுனா:- நல்லது கேள் சொல்வதை......மன்னா ஏடு ஒவ்வொருவருக்கும் சிறந்த ஞானச் செல்வம். மனிதங்களை உருவாக்கும் மையம். அறிவுக் களஞ்சியம். கலைஞரின் கலைக்கூடம். மகிழ்வின் இருப்பிடம். இத்தனையும் புரியவில்லையா?

விதுனா:- புரிந்தது உண்மை. நன்றி மிதுனா. பணியார்வமும் இறைபற்றும் கொண்ட உன்னை மெச்சுகிறேன். திருச்சபைப் பணியாளனாகப் பங்கில் பணிசெய்வோம். புறப்படு....

மன்னா வாசகி - பேசாலை

## வெளிநாட்டிற்கு மன்னா

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர் நண்பர்கள் மன்னாவைப பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக ரூபா 500 உடன் எமது பணியகத்தில் ஒப்படைக்கவும். உங்கள் உறவினரின் வீடு தேடி மன்னா பறந்து செல்லும். இது வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய சிறந்த பரிசாக அமையுமல்லவா?

## வெளி நாட்டில் உள்ளவர்கள் மன்னா சந்தாப்பணம் அனுப்புவதாயின்

தபால் செலவு உட்பட ஒரு ஆண்டுக்கான மன்னா சந்தாப்பணமாக இலங்கை ரூபாய் 500 அனுப்புமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். விரும்பியவர்கள் அன்பளிப்பாக மேலதிக தொகையையும் அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின் HATTON NATIONAL BANK LIMITTED - MANNAR THE EDITOR, S/A No.11780 என்ற பெயருக்கு காசோலையை வரைந்து எமது முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### உங்கள் தொடர்புகளுக்கு

கீழே உள்ள இரண்டு முகவரிகளுள் ஏதாவது ஒன்றுடன் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்

**அலுவலக முகவரி**

பதிப்பாசிரியர்
"மன்னா"
திருமறைப் பணி நிலையம்
புனித செபஸ்தியார் வீதி
மன்னார்

**OFFICE ADDRESS**

The Editor
"MANNA"
Pastoral Centre
St. Sebastian's Street
Mannar.

**வதிவிட முகவரி**

பதிப்பாசிரியர்
"மன்னா"
பங்குப் பணிமனை
புனித லோறன்சியார் ஆலயம்
தலைமன்னார்

**RESIDENTIAL ADDRESS**

The Editor
"MANNA"
Parish House
St. Lawrence Church
Talaimannar

## நீத்தார் நினைவுகள்

நீத்தார் நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகின்றீர்களா?

அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந் நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில் எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக்குக் குறிப்பு, புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 500 ஆகியவற்றை அனுப்பி வையுங்கள். திருமறைப்பணி நிலையத்தில் [illegible] புரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். புகைப்படப் பிரதிகளை உங்களுக்கு [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா

தனது மக்களை பாதுகாப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக் கொண்டாலும்

# வன்முறைகளற்ற முறைகளே சிறந்தது

## வத்திக்கான் கருத்து

## அன்பின் கலாச்சாரத்தை அகிலமெங்கும் உருவாக்குவோம்

### தஜிகிஸ்தான் நாட்டில் திருத்தந்தை அறைகூவல்



தந்தையான ஒரே கடவுள் தந்த அழகான உலகமிது. வன்முறைக் கலாச்சாரத்தை அன்று அன்பின் கலாச்சாரத்தையே இங்கு உருவாக்க வேண்டும் என மத்திய ஆசியக் குடியரசான தஜிகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் அங்கு பல்லாயிரக்கணக்கானோர் கூடியிருந்த பிரார்த்தனை நிகழ்வு ஒன்றிலே வேண்டுகோள் விடுத்தார். அமெரிக்காவில் நடத்தப்பட்ட கொடுமை உலகில் பிளவுகளை மேலும் ஆழப்படுத்துகின்ற செயல்களுக்கு நம்மை இடடுச் செல்லக் கூடாது என்று கூறிய திருத்தந்தை மேலும் கூறுகையில் இஸ்லாமிய மதத்துக்கு கத்தோலிக்க திருச்சபை பெரும் மதிப்பளிக்கிறது. பேதங்களுக்கோ வன்முறைகளுக்கோ வெறுப்புக்களுக்கோ இடமளிக்காது சகல மதத்தவரும் உலக சமாதானத்துக்காக ஒன்றுபட வேண்டும். தந்தையான ஒரே கடவுள் தந்த அழகான உலகமிது. வன்முறைக் கலாச்சாரத்தை அன்று அன்பின் கலாச்சாரத்தையே இங்கு உருவாக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். ஆப்கானிஸ்தான் எல்லை ஓரம் அமைந்துள்ள தஜிகிஸ்தானில் திருத் தந்தையின் விஜயம் முடியும் வரை ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படமாட்டாது என்று அமெரிக்க நிர்வாகம் உறுதியளித்திருந்தது. தனது மக்களை கெரில்லாக்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்காக அமெரிக்கா மேற்கொள்ளும் முயற்சிகளை ஏற்றுக் கொண்டாலும் வன்முறைகளற்ற முறைகளே சிறந்தது என்று வத்திக்கான் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## ஒலி நாடாவில் திருப்பாடல்கள்

விவிலியத்தில் அடங்கியுள்ள திருப்பாடல்கள் நூலில் 150 திருப்பாடல்கள் உள்ளன. இந்த 150 திருப்பாடல்களுக்கும் 150 பாடல்களை எழுதி அவற்றை நூலுருவில் வெளியிட்டுள்ளார் கொழும்பு கொச்சிக்கடை பங்கைச் சேர்ந்த திரு. அம்புறோஸ் பீற்றர் அவர்கள். இந்த 150 பாடல்களையும் ஒலி நாடாக்களிலும் இசைத்தட்டிலும் வெளியிடுவது என்ற திட்டத்தின்கீழ் முதல் 30 பாடல்களையும் மூன்று ஒலி நாடாக்களிலும் (பாகம் 1, 2, 3) இரண்டு இசைத் தட்டுக்களிலும் வெளியிட்டுள்ளார். இவற்றுக்கு ஆசியுரை வழங்கியுள்ள கொழும்பு பேராயர் இவற்றை வழிபாடுகளில் பயன்படுத்தலாம் என சிபார்சு செய்துள்ளார். இவற்றைப் பெற விரும்புவோர் அ. பீற்றர், 53 1/6 நியூனம் சதுக்கம், கொழும்பு 13. என்ற முகவரியோடு தொடர்பு கொள்ளவும். தொலைபேசி எண் 330772. மன்னாரில் உள்ளவர்கள் மன்னார் திருமறைப்பணி நிலையத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

## வரட்சியினால் வாடும் தென்பகுதி மக்களுக்கு கத்தோலிக்க சமூகம் கைகொடுக்கிறது

வரட்சியினால் வாடும் தென்பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்குவதென இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை தீர்மானித்துள்ளது. இதன்படி செப்ரெம்பர் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதிலுமுள்ள சகல ஆலயங்களிலும் திருப்பலியின்போது இதற்கென விசேட நிதி சேகரிக்கப்பட்டது. காலி மற்றும் பதுளை ஆயர்களினூடாக நிவாரணம் வழங்கும் நிறுவனங்களிடம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக இந்நிதி கொடுக்கப்பட்டுள்ளது.

## கருச்சிதைவு செய்பவர்களிடம் தற்கொலை எண்ணம்

கருச்சிதைவு செய்து கொள்ளும் பெண்களிடம்தான் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் அதிகமாகக் காணப்படுகிறது எனத் தெரியவந்துள்ளது. கடந்த மார்ச் மாதம் பெர்லின் நகரில் பெண்களின் மன நலத்தைப் பற்றி நடந்த சர்வதேச கருத்தரங்கில் டேவிட் ரியார்டன் என்பவர் தனது ஆராட்சியின் முடிவை வெளியிட்டார். அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் .,73,000 பெண்களின் இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பரிசோதித்து அவர் இந்த முடிவுக்கு வந்ததாக அறிவித்தார். குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்களுள் தற்கொலை செய்தவர்களின் எண்ணிக்கை இலட்சத்தில் மூன்று பேர் என்றால் கருச்சிதைவு செய்து கொண்டவர்களில் அது இலட்சத்தில் 7.8 ஆக இருந்ததுதான் அவரது கண்டுபிடிப்புக்கு ஆதாரமாகும்.

## உலக மக்கள் தொகையில் கத்தோலிக்கர் 17.4 வீதம்

[illegible]

## இந்திய அருங்கொடை இயக்கத் தலைவராக சபாநாயகரின் செயலாளர்

அகில இந்திய அருங்கொடை மறுமலர்ச்சி இயக்க தலைவராகப் பொதுநிலையினரான திரு. சிரில் ஜான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர் புது டில்லியிலிருந்து பணியாற்றுவார். திரு ஜான் இந்தியப் பாரளுமன்ற (லோக சபை) சபாநாயகர் திரு பாலயோகியின் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இனவாதம் ஒரு பாவம்

### இனவாத ஒழிப்பு மாநாட்டில் வத்திக்கான் பிரதிநிதி

இனவாதத்துக்கும் இனப்பாரபட்சத்துக்கும் எதிரான மகாநாடு தென் ஆபிரிக்காவின் டர்பன் நகரில் ஒக்ரோபர் மாதம் முதல் வாரத்தில் இடம் பெற்றது. இனவாதத்திற்கு எதிராக நடை பெற்ற மூன்றாவது உலக மகாநாடு இதுவாகும். முன்னைய மகாநாட்டில் இனவெறியும் இன ஒதுக்கலுமே முக்கிய அம்சங்களாக இருந்தன ஆனால், இந்த மாநாட்டில் இனப்பாரபட்சமும் சகிப்புத்தன்மை இல்லாமையும் முக்கிய இடத்தை வகித்தன. இம் மகாநாட்டிற்கு வத்திக்கான் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட தலைமை ஆயர் டியர் முயிட் மாட்டின் அவர்கள் இனவாதம் ஒரு பாவம் என்றும் அது அடிப்படையிலேயே பொய்யானதும் பிளவுகளை ஏற்படுத்த உருவாக்கப்பட்டதுமான கொள்கை என்றும் குறிப்பிட்டார். மேலும் தனிப்பட்டதும், சமூக மட்டத்திலுமான மனமாற்றத்திற்கும், மனநிலை மாற்றத்திற்கும் அழைப்பை விடுத்தார். உலகில் இனவாதம் இன்று எடுத்துள்ள பல்வேறு பரிணாமத்தை கணிப்பில் கொள்ளும்படியும் மகாநாட்டில் கலந்து கொண்டவர்களைக் கேட்டுக் கொண்டார். தாழ்த்தப்பட்ட சாதிகளுக்கு எதிராக இந்தியாவில் இடம் பெறும் பாரபட்ச நிலையை குறிப்பிட அவர் தவறவில்லை.

## அருட் சகோ ஆன்மேரி இறைவனடி சேர்ந்தார்



திருக்குடும்பக் கன்னியர் அருட் சகோதரி ஆன்மேரி 12.10.2001 அன்று வவுனியாவில் காலமானார். 12. 10. 1925 அன்று பிறந்த இவர் 18-12-1947 அன்று தனது முதல் அர்ப்பணத்தையும் 18-12-1952 அன்று தனது நித்திய அர்ப்பணத்தையும் செய்தார். இளவாலை, அனுராதபுரம், மயிலிட்டி, மன்னார், வவுனியா, கரம்பன், பாஷையூர், (அமலஉற்பவம்), திருநெல்வேலி, பண்டத்தரிப்பு, ஆகிய இடங்களில் பணிபுரிந்து இறுதிக் காலத்தில் வவுனியாவில் ஓய்வு பெற்றார். பெற்றோரற்ற வறிய பிள்ளைகள் பிற்காலத்தில் குடும்பங்களில் நிறைவாக வாழ வழிவகுத்து, வயோதிபரையும், குருக்களையும் அன்புடன் பராமரித்து தன் பணியில் நிறைவுடனும் மகிழ்வுடனும் வாழ்ந்தார். வவுனியாவில் ஓய்வு பெறும் காலத்தில் இறைவனில் நிறைவெய்திய அருட்சகோதரிக்கு மன்னா தனது ஆழ்ந்த அஞ்சலிகளைத் தெரிவிக்கிறது. அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிப்போம்.

## பட்டித்தோட்டத்தில் வயோதிபர் தினம்

பட்டித்தோட்டத்திலே மன்னார் ஆயர் அவர்களின் பொறுப்பிலே அன்பின் சகோதரிகளினால் நடத்தப்பட்டு வருகின்ற வயோதிபர் இல்லத்தில் ஐப்பசி 6ம், 7ம் திகதிகளில் வயோதிபர் தினம் கொண்டாடப்பட்டது. இவ்விழா அருட்தந்தை விக்ரர் சோசை தலைமையில் 6.10.2001 அன்று மு.ப. 9.30 மணிக்கு மரநடுகை வைபவத்துடன் ஆரம்பமானது. இவ்விழாவில் அங்குள்ள முதியோரை கௌரவித்து மகிழ்விக்கும் முகமாக அருட்பணியாளர் எமிலியானுஸ் பிள்ளை, அருட்பணியாளர் இராயப்பு, டிலாசால் சகோதரர்கள் மற்றும் மன்னார் ஆதாரவைத்தியசாலை ஊழியர்களும் சமூகமளித்திருந்தார்கள். இவர்களின் வருகையினால் மகிழ்ந்திருந்த முதியோர்கள் தமது வாழ்வில் பட்டுணர்ந்த அனுபவங்களை பகிர்ந்துகொண்டதோடு சில கலை நிகழ்வுகளை தாமே முன்வந்து நடத்தினர்.

## அன்னை திரேசாவும் சாத்தானும்

கல்கத்தா தலைமை ஆயர் கென்றி டி சொயிசா ஆண்டகை இத்தாலிய தினப்பத்திரிகை ஒன்றுக்கு அன்னை திரேசா பற்றி பேட்டி அளித்திருக்கிறார். அப்பேட்டியில் அன்னை திரேசா 1997ம் ஆண்டு வைத்தியசாலையில் இருந்தபோது நித்திரையின்றி வேதனைப்பட்டதாகவும், தானும் இன்னுமொரு குருவும் சாத்தானைக் கட்டுப்படுத்த செபித்ததாகவும் கூறியிருக்கிறார். அன்னை திரேசா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற வேளையில் தலைமை ஆயரும் அதே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். (தொடர்ச்சி 8 பக்.)

## மறைவட்ட இளைஞர் ஒன்றியக் கூட்டங்கள

மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய மாதாந்த செயற்குழு கூட்டமானது தாழ்வுபாடு மற்றும் மன்னார் பங்குகளில் இடம்பெற்றது. தாழ்வுபாட்டுப் பங்கில் கடந்த 24. 03. 2001 அன்று அருட்தந்தை நோபட் அடிகளாரின் மேற்பார்வையில் இக்கூட்டம் இடம் பெற்றது. இந்நிகழ்விற்கு இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த வின்னி அடிகளார் அவர்களும் மன்னார் மறைவட்ட இளைஞர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி. ஞானாதிக்கம் அடிகளாரும் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளாரும் சுமார் 150க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகளும் கலந்து சிறப்பித்தனர்.

*தொடர்ச்சி (8ம் பக்கம்)*

## எலிசபெத் மகாராணியின் நெருங்கிய உறவினர் கத்தோலிக்கரானார்

எலிசபெத் மகாராணியின் ஒன்றுவிட்ட சகோதரியாகிய கெனற் கோமகனது இளைய மகனாகிய நிக்கலஸ் வின்சர் பிரபு இங்கிலாந்து திருச்சபையிலிருந்து விலகி கத்தோலிக்க மதத்தைத் தழுவிக் கொண்டார். அவரது தாயார் 1994ல் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டிஸ் அரசுரிமைக்கு 25வது வாரிசான இவர் இம் மதமாற்றத்தால் அந்த உரிமையை இழக்கின்றார். இங்கிலாந்து சட்டத்தின்படி கத்தோலிக்க மறையை தழுவினாலோ கத்தோலிக்கரை மணம் செய்தாலோ ஒருவர் அரசுரிமைக்கு தகுதியற்றவராகி விடுகிறார்.

## உலக ஆயர் பேரவையில் அநுராதபுர ஆயர்

இவ்வருடம் ஒக்டோபரில் ரோமாபுரியில் நடைபெற்ற உலக ஆயர் பேரவையின் 10வது கூட்டத்தில் பங்கு பற்றுபவர்களென திருத்தந்தையால் நியமிக்கப்பட்ட 32 ஆயர்களுள் ஆயர் ஒஸ்வால்ட் கோமிஸ்ும் ஒருவராவார். இக் கூட்டத்தில் உலகின் எல்லா நாடுகளிலிருந்தும் அந்நாடுகளின் ஆயர் பேரவைகளினால் தெரிவுசெய்யப்பட்டவர்களும், திருத்தந்தையால் ஐந்து கண்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் பங்கு பற்றினர். தற்போது ஆயர் கோமிஸ் இலங்கை ஆயர் பேரவையின் தலைவராகவும், ஆசிய ஆயர் பேரவைகளது கூட்டிணைப்பின் பொதுச் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார்.

இப்பத்திரிகை மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் வாழ்வுதயம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஆசிரியரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org